வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු

Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 07.02.2024 புதன்கிழமை இதழ் : 38 பக்கங்கள் : 12




## தமிழ் அரசு கட்சியின்

# பொதுச்செயலர் விவகாரம் இணக்கம் எட்டப்பட்டது!

யாழ்ப்பாணம், பெப்ரவரி 07

**தமிழ் அரசு கட்சியின் பொதுச் செயலாளர் பதவி தொடர்பில் இணக்கம் எட்டப்பட்டுள்ளதாக அறிய வருகின்றது. இதன்படி, திருகோணமலை மாவட்டத்துக்கு ஒரு வருடமும் மட்டக்களப்பு மாவட்டத்துக்கு ஒரு வருடமும் பொதுச் செயலர் பதவி வழங்கப்படும் என்று தமிழ் அரசு கட்சியின் தலைமைக்கு நெருக்கமான வட்டாரங்கள் 'ஈழநாடு' நாளிதழுக்கு தெரிவித்தன.**

தமிழ் அரசு கட்சியின் புதிய தலைவரான பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன் அண்மையில், கிழக்கு மாகாணத்துக்கு சென்று கட்சியினரை சந்தித்துப் பல கட்டப் பேச்சுகளை நடத்தினார். இதன்பிரகாரமே பொதுச் செயலாளர் விவகாரத்துக்கு தீர்வு எட்டப்பட்டது. இதன்படி, திருகோணமலையின் ச. குகதாசன், மட்டக்களப்பின் ஞா. சிறீநேசன் ஆகியோர் தலா ஒரு வருடம் 11

## 'யுக்திய' மூலம் 56,541 பேர் கைது!

கொழும்பு, பெப். 07

கடந்த ஆண்டு டிசெம்பர் 17ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட யுக்திய நடவடிக்கை 50 நாட்களை நிறைவு செய்துள்ளது. இந்தக் காலப்பகுதியில் பல்வேறு குற்றங்களுடன் தொடர்புடைய 56ஆயிரத்து 541 சந்தேகநபர்கள் 11

## பதவி விலகினார் கெஹலிய!

கொழும்பு, பெப். 07



சுற்றாடல் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தனது அமைச்சுப் பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

அவர் தனது பதவி விலகல் கடிதத்தை நேற்று ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ளதாக அரச தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தரமற்ற மனித இம்யூனோகுளோபுலின் மருந்துகளை அதிக விலையில் இலங்கைக்கு கொள்வனவு செய்ய அனுமதியளித்த குற்றச்சாட்டில் அமைச்சர் கெஹலிய கடந்த 2ஆம் திகதி கைதுசெய்யப்பட்டதுடன், அவரை பெப்ரவரி 15ஆம் திகதிவரை விளக்கமறியல் வைக்குமாறு மாளிகாகந்த நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

கைதுசெய்யப்பட்ட தினமே கெஹலிய ரம்புக்வெல வெலிக்கடை சிறைச்சாலை 11

### 5ஆவது கூட்டத் தொடருக்காக

## பாராளுமன்றம் இன்று ஆரம்பம்!

கொழும்பு, பெப். 07

பாராளுமன்ற கூட்டத்தொடர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இன்று புதன்கிழமை ஆரம்பமாகிறது. 9ஆவது பாராளுமன்றத்தின் ஐந்தாவது கூட்டத் தொடருக்காகவே இன்று சபை கூடுகின்றது. இதன் ஒத்திகை நிகழ்வு நேற்று பாராளுமன்ற வளாகத்தில் நடைபெற்றது.

அரசமைப்பின் 33ஆவது உறுப்புரையில் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்துக்கு அமைய ஜனாதிபதி 11

## உயர்நீதிமன்ற தீர்ப்பின்படியே நிகழ்நிலை சட்டம் நிறைவேற்றம்!

### சபாநாயகர் பணிமனை விளக்கம்

கொழும்பு, பெப். 07

உயர்நீதிமன்றத்தின் தீர்மானத்தின் பிரகாரம் சட் டமா அதிபர் திணைக்களம் உறுதிப்படுத்திய பின்னர் நிகழ்நிலை பாதுகாப்பு சட்டம் நிறைவேற்றப்பட்டதாக சபாநாயகர் பணிமனை தெரிவித்துள்ளது.

நிகழ்நிலை பாதுகாப்பு சட்டம் தொடர்பில் சபாநாயகருக்கு எதிராக எதிர்க்கட்சிகள் குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளன. அத்துடன், நம்பிக்கையில்லா பிரேரணையையும் கொண்டு வரத் தீர்மானித்துள்ளன. இந்த நிலையில், சபாநாயகரின் பணிமனை நேற்று விளக்க அறிக்கை ஒன்றை வெளியிட்டது.

அதில், பாராளுமன்றத்தின் சட்டம் இயற்றும் 11

## இந்த வருடம் 2 தேர்தல்கள்!

### அமைச்சர் பந்துல கூறினார்

கொழும்பு, பெப். 07

இந்த வருடத்தில் ஜனாதிபதி தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல் நடத்தப்படவுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர், அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அமைச்சர் இதனை கூறினார்.

ஜனாதிபதி தேர்தல் மற்றும் பொதுத் தேர்தலுடன் தொடர்புடைய செலவினங் களை, 2024 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் 11

## ஒக்ரோபர் முதல் வாரத்தில் ஜனாதிபதி தேர்தல் நடக்கும்

### அமைச்சர் ஹரீன் தகவல்

கொழும்பு, பெப். 07

"ஜனாதிபதி தேர்தல் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் முதல் வாரத்தில் நடத்தப்படும்." என அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

தேர்தல்கள் சட்டத்தின் பிரகாரம் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 18ஆம் திகதிக்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தலை நடத்தும் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. 11

## தேர்தலை பிற்போட உத்தேசமா?

கொழும்பு, பெப். 07

தற்போதைய அரசாங்கத்தின் பங்காளிகளாக உள்ள பல தரப்பினர், மேலும் சிலரை இணைத்துக்கொண்டு கூட்டு அரசாங்கத்தை அமைப்பது தொடர்பான கலந்துரையாடல்களை ஆரம்பித்துள்ளதாக அறிய முடிகிறது.

கூட்டு அரசாங்கத்தை அமைப்பதற்காக ஆளுங்கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுடன் பல சந்தர்ப்பங்களில் கலந்துரையாடல்களை நடத்தியுள்ளனர். 11

## தென்னிந்திய திரை பிரபலங்கள் நேற்று யாழ்ப்பாணம் வந்தனர்!



யாழ்ப்பாணம், பெப். 07

பாடகர் ஹரிஹரன் பங்கேற்கவுள்ள யாழ்ப்பாண இசை நிகழ்ச்சியை முன்னிட்டு தென்னிந்திய நடிகை ரம்பா, பிரபல தென்னிந்திய நடன இயக்குநர் கலா மாஸ்டர் யாழ்ப்பாணம் வருகை தந்தனர்.

இவர்கள் யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் ஊடாக நேற்று யாழ்ப்பாணம் வந்தனர்.

யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் நாளை மறுதினம் ஹரிகரனின் இசை நிகழ்ச்சி 11

## ஜே. வி. பி. தலைவரின் இந்திய பயணத்துக்கு நாமல் வரவேற்பு

கொழும்பு, பெப். 07

கடந்த காலங்களில் இந்திய எதிர்ப்பு கொள்கையை பின்பற்றிய ஜே. வி. பியின் இந்திய பயணத்தை வரவேற்பதாக பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இலங்கை கடந்தகாலங்களில் பல இந்திய முதலீடு களை - முதலீட்டாளர்களை இழந்தமைக்கு ஜே. வி. பியே முக்கிய காரணம். 11

## பூநகரியில் காணியற்றோருக்கு 472 ஏக்கரை பகிர்வதற்கு திட்டம்

### அமைச்சர் டக்ளஸ் நடவடிக்கை

கொழும்பு, பெப். 07

பூநகரியில் காணியற்ற மக்களுக்கு 472 ஏக்கர் காணிகளை பகிர்ந்தளித்து மரமுந்திரிகை செய்கையில் அவர்களை ஊக்குவிப்பதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கை எடுத்துள்ளார் என்று அவரின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன், இந்த விடயத்துக்கு நேற்று முன்தினம் நடந்த அமைச்சரவை கூட்டத்தின்போது அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளதாகவும் 11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது

சமூகவலைதளங்களை கட்டுப்படுத்தக் கொண்டு வரப்பட்ட நிகழ்நிலை சட்டத்தை பல்வேறு தரப்பினரும் தொடர்ந்து கண்டித்து வருகின்றனர்.

தாங்கள் ஆட்சிக்கு வந்தால் அந்தச் சட்டத்தை நீக்கிவிடுவோம் என்று எதிர்க்கட்சித் தலைவர் அண்மையில் அறிவித்திருந்தார்.

அந்தச் சட்டம் கருத்து சுதந்திரத்துக்கு அச்சுறுத்தல் விடுக்கின்றது என்று கூறப்படுவது ஏற்றுக்கொள்ளக் கூடியதுதான். ஆனால், அரசாங்கம் சொல்வதுபோல, கருத்து சுதந்திரம் என்ற போர்வையில் மற்றையவர்களின் 'கழுத்தை நெருக்குவதும்' தவறானதுதான்.

அண்மையில், ஒரு செய்தி தமிழ் ஊடகங்களில் வெளிவந்திருந்தது. முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க தலைமையில் மீண்டும் புதிய கூட்டணி ஒன்றை அமைக்கும் முயற்சி நடைபெற்றுவருவது நாம் அறிந்ததுதான். சிறீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையில் பல கட்சிகளையும் கொண்ட இந்தப் புதிய கூட்டணியில் சேர்வதற்காக பல கட்சிகள் தொடர்ந்து பேச்சு நடத்தி வருகின்றன.

சிறீ லங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து பின்னர் அது ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பாக வெற்றிலை சின்னத்தில் போட்டியிடுவதற்கு முன்னதாக அதன் கூட்டணி கதிரை சின்னத்திலேயே தேர்தல்களை சந்தித்தது. சந்திரிகா காலத்தில் இருந்த அந்தப் பழைய கூட்டணியையே இப்போது புதிதாக மீண்டும் அமைப்பதற்கு சந்திரிகா தொடர்ந்து பேச்சு நடத்தி வருகிறார்.

புதியதாக உருவாகும் இந்தப் 'பழைய கூட்டணியில்' சுதந்திரக் கட்சிக்கு ஐம்பதுவீத இடங்களையும் அதனுடன் இணையும் ஏனைய கட்சிகளுக்கு ஐம்பது வீத இடங்களையும் வழங்குவது என்ற 'போர்முலாவோடு' சந்திரிகா பேச்சு நடத்தி வருகிறாரென்றும் முன்னர் நீண்டகாலம் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச்செயலாளராக இருந்த சுசில் பிரேமஜயந்த போன்ற தலைவர்களை மீண்டும் அதனுடன் இணையுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இந்தக் கூட்டணி மீது பலரின் பார்வையும் திரும்பியிருப்பதைத் தொடர்ந்து அந்தக் கூட்டணியை முளையிலேயே கிள்ளிவிட பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி திட்டமிட்டு செயல்படுவதாக தெற்கில் ஓர் ஊடக நண்பர் தெரிவித்தார். அதனால்தான் அந்தக் கட்சி தமது பத்திரிகையில் ரணில் - சந்திரிகா கூட்டு என்றும் அதில் ரணில் ஜனாதிபதி - சந்திரிகா பிரதமர் எனவும் செய்தி வெளியிட்டு பரபரப்பை ஏற்படுத்தியிருந்ததாம். ரணிலோடு ஏற்கனவே பிரதமர் பதவி கனவில் இணைய முயல்பவர்களை குழப்புவதுதான் அவர்களின் நோக்கம் என்று நினைக்கவேண்டியிருந்தது.

ஏற்கனவே, ரணில் தரப்போடு நெருக்கமாக இருக்கும் சந்திரிகா எதிர்காலத்தில் தீவிர அரசியலில் ஈடுபட முன்வந்திருந்தாலும் பிரதமர் பதவிபோன்ற பதவி எதனையும் ஏற்பதில்லை என்பதிலும் உறுதியாக இருந்து வருகின்றார்.

அப்படி இருக்கையில் எதற்காக இப்படியொரு செய்தி ஐக்கிய மக்கள் சக்தியின் பத்திரிகையில் வெளிவந்தது என்பதை அறிய முயன்றபோதுதான் சில தகவல்கள் வெளிச்சத்துக்கு வந்தன.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவை பிரதான வேட்பாளராக களம் இறக்குவதற்காக அவருடன் ஐக்கிய மக்கள் சக்தியை இணைத்து வைக்கும் முயற்சியில் சில வெளி சக்திகள் தீவிரமாக முயன்று வருகின்றமை பற்றி முன்னரும் இந்தப் பத்தியில் எழுதியிருந்தோம்.

இவ்வாறு ரணில் - சஜித் இணைப்பு முயற்சி வெற்றிபெற்றால் தமது முக்கியத்துவம் குறைந்துவிடும் என்று நம்பும் சில ஐக்கிய மக்கள் சக்தியின் முக்கிய தலைவர்கள் இந்த இணைப்பை விரும்பவில்லை என்றும் அதனாலேயே, சந்திரிகாவுக்கு பிரதமர் பதவி வழங்கப்படுமானால் ரணிலுடன் சஜித் இணைந்தாலும் அவருக்கு பிரதமர் பதவி வழங்கப்படாது என்று அச்சத்தை அவருக்கு ஏற்படுத்துவதன் மூலம் இந்த இணைப்பைத் தடுத்து நிறுத்தவதற்காகவே இதுபோன்ற செய்திகளை வெளியிட்டு வருவதாகவும் ஐக்கிய மக்கள் சக்திக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன.

**- ஊர்க்குருவி.**

## மாங்குளம் அம்புலன்ஸ் சேவையை மீண்டும் ஆரம்பிக்குமாறு கோரிக்கை!

முல்லைத்தீவு, பெப். 07

மாங்குளம் பிரதேசத்துக்கான இலவச அம்புலன்ஸ் சேவை (1990) கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. இதனால், அந்தப் பகுதி மக்கள் பெரும் துன்பங்களை சந்தித்து வருகின்றனர். எனவே, இந்த அம்புலன்ஸ் சேவையை மீண்டும் ஆரம்பிக்குமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மாங்குளம் பொலிஸ் நிலையத்தில் நின்று சேவையில் ஈடுபடும் இந்த அவசர அம்புலன்ஸ் (1990) வாகனம், பிரதானமாக ஏ-9 வீதியில் இடம்பெறும் விபத்துகளின் போது காயப்பட்டவர்களை ஏற்றிச் செல்லப் பயன்பட்டது.

அத்துடன், மருத்துவ தேவைக்கான போக்குவரத்து சிரமங்களை எதிர்நோக்கும் பாண்டியன்குளம், நட்டாங்கண்டல், மல்லாவி, கோட்டைகட்டிய குளம், அம்பலபெருமாள் குளம், அம்பகாமம், தச்சடம்பன், ஒலுமடு, இந்துபுரம், வசந்தபுரம் போன்ற கிராமங்களின் மக்களுக்கும் சேவைகளை வழங்கியது.

தற்போது மூன்று மாதங்களாக இந்த அம்புலன்ஸ் சேவை நிறுத்தப்பட்டுள்ளது. இதனால், மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். அத்துடன், மருத்துவ போக்குவரத்துக்காக பெருந்தொகை பணத்தையும் ஏழை மக்கள் செலவிட வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

எனவே, இந்த அம்புலன்ஸ் சேவையை மீண்டும் ஆரம்பிக்குமாறு அதிகாரிகளை பொது மக்கள் கோரியுள்ளனர்.

(ஐ)

## சுக்கிர வார சொற்பொழிவு

யாழ்ப்பாணம், பெப். 07

நீர்வேலி கந்தசுவாமி தேவஸ்தானத்தில் நடைபெறும் சுக்கிர வார சிறப்பு சொற்பொழிவு ஆலய சண்முக விலாச மண்டபத்தில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு சிவநெறிப் பிரகாசர் கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ளது.

தேவஸ்தான பிரதம குருக்கள் சிவஸ்ரீ இராஜேந்திர சுவாமிநாத குருக்களின் ஆசியுரையைத் தொடர்ந்து. சிறப்பு சொற்பொழிவை இளம் சைவப்புலவர் ச. நவநீதன், 'அபிராமி என்னும் அருமருந்து' என்ற தலைப்பில் நடைபெறும். (ஐ)

## அவிசாவளை வெடி விபத்தில் ஒருவர் மரணம்

கொழும்பு, பெப். 07

பழைய இரும்புகளை சேகரிக்கும் இடம்பெற்ற இடத்தில் நடந்த வெடிப்பு சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்தார்.

கொழும்பு - அவிசாவளை மாதொல பிரதேசத்தில் இடம்பெற்ற இந்த வெடிப்பு சம்பவத்தில் மஸ்கெலியாவை சேர்ந்த 49 வயதான நபரே உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

பழைய இரும்புகளை மற்றொருவருடன் இணைந்து சேகரித்தபோதே இந்த வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் படுகாயமடைந்த நபர் உடனடியாக அவிசாவளை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். எனினும், அவர் அங்கு உயிரிழந்தார்.

சம்பவம் இடத்தில் குற்றப் புலனாய்வு பிரிவு விசாரணை அதிகாரிகள் மற்றும் அரச இரசாயன பகுப்பாய்வு திணைக்கள அதிகாரிகள் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ஐ)

## ஞானபாஸ்கரோதய முன்பள்ளியில் மூலிகை செடி, மரக்கன்று நாட்டல்!



யாழ்ப்பாணம், பெப். 07

கல்வியங்காடு ஞான பாஸ்கரோதய முன்பள்ளி வளாகத்தில் பிரதேச செயலகத்தால் வழங்கப்பட்ட மூலிகை செடிகள், மரக்கன்றுகள் நாட்டும் நிகழ்வு நேற்று செவ்வாய்க்கிழமை காலை நடைபெற்றது.

ஜே/ 259 கிராம அலுவலர் தயாபரன் தலைமையில் நடந்த இந்த நிகழ்வில் அபிவிருத்தி உத்தியோகத்தர் தயாளினி, கிராம அபிவிருத்தி சங்க தலைவர் பன்னீர்செல்வம், முன்பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் பங்கேற்று வெற்றிலை, தவசி முருங்கை, சமண்டலை, மலைவேம்பு உள்ளிட்ட மரங்களை நாட்டி வைத்தனர். (ஐ)

## சிறுமிக்கு உதவுவதாக நடித்து வன்புணர்வு செய்தவர் கைது!

### சிறுமியின் காதலனும் கைது

கொழும்பு, பெப். 07

16 வயது சிறுமி வீட்டில் கோபித்துக் கொண்டு தனது காதலனை பார்ப்பதற்காக இரவுவேளை சென்றபோது அவருக்கு உதவுவது போன்று நடித்து சிறுமியை வன்புணர்ந்த நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அநுராதபுரம் - நொச்சியாகம பிரதேசத்தில் இடம்பெற்றுள்ள இந்தச் சம்பவம் குறித்து மேலும் அறிய வருவதாவது,

பாதிக்கப்பட்ட சிறுமி தனது பாட்டி சுகயீனமடைந்ததால் அவரை பராமரிக்க பாட்டியின் வீட்டுக்கு சென்றுள்ளார். இதனிடையே, அவரின் 32 வயது காதலனை சந்தித்துத் தனது தொடர்பை புதுப்பித்துள்ளார். இந்தக் காதலுக்கு எதிர்ப்புத் தெரிவித்த பாட்டி சிறுமியை அடித்துள்ளார். இதனையடுத்து குறித்த சிறுமி தனது உடைமைகளையும் எடுத்துக்கொண்டு கடந்த முதலாம் திகதி தனது காதலனின் வீட்டுக்குச் சென்றுள்ளார்.

வழியில் விடயத்தை அறிந்த அதேபகுதியை சேர்ந்த 51 வயது நபர் ஒருவர் சிறுமியிடம் இரவில் பயணிக்க வேண்டாம் என்றும் காலையாகும் வரை தனது வீட்டில் தங்கியிருக்குமாறும் கூறி சிறுமியை தனது வீட்டுக்கு அழைத்துச் சென்றுள்ளார். அங்கு அந்த நபர் சிறுமியை வன்புணர்வு செய்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்திய பொலிஸார் குறித்த நபரை கைது செய்தனர். மேலும், பொலிஸாரின் விசாரணையில் சிறுமி இரு வருடங்களுக்கு முன்னர் தனது காதலனால் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார் என்று விசாரணையில் தெரிய வந்தது.

இதனையடுத்து அவரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

(ஐ)

Eelanadu
07.02.2024 புதன்கிழமை
சோபகிருது வருடம், தை 24

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# இந்திய - இலங்கை கூட்டு கண்காணிப்பு படையணி

தமிழ்நாட்டு மீனவர்கள் தொடர்ந்தும் கைது செய்யப்படுவது ஏன் என்று சென்னை உயர் நீதிமன்றம் இந்திய மத்திய அரசை நோக்கி கேள்வி எழுப்பியிருக்கின்றது. இதேவேளை, இந்திய காங்கிரஸ் கட்சி தமிழ்நாட்டு மீனவர்களின் கைது நடவடிக்கையை எதிர்த்து கண்டன ஆர்ப்பாட்டத்தை முன்னெடுக்கவுள்ளது. தமிழ்நாட்டு மீனவர்கள் இலங்கையின் கடல் எல்லைக்குள் மீன்பிடியில் ஈடுபடுவதும் இலங்கைக் கடற்படையினர் அவர்களைக் கைது செய்வதும் ஒரு தொடர் கதையாகவே நீண்டு செல்கின்றது. இதுவரையில் பல இந்திய மீனவர்கள் கொல்லப்பட்டிருக்கின்றனர். எனினும், இந்தப் பிரச்னை தொடர்கின்றது. ஏன் இந்தப் பிரச்னையை சுமுகமாகத் தீர்க்க முடியவில்லை?

இது தொடர்பில் வடபுல மீனவர்களும் தமிழ்நாட்டு மீனவர்களும் அவ்வப்போது மாறிமாறி குற்றச்சாட்டுகளை முன்வைக்கின்றனர். இந்தப் பிரச்னையை தீர்க்கும் நோக்கில் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் எவையும் இதுவரையில் வெற்றியளிக்கவில்லை. இந்தநிலையில் இந்தப் பிரச்னையை கையாள்வதற்கான புதிய அணுகுமுறைகள் தொடர்பில் இரண்டு அரசுகளும் தீர்மானிக்க வேண்டும்.

இலங்கைக்கும் இந்தியாவுக்குமான இணைப்புகள் தொடர்பில் அதிகம் கரிசனை காண்பிக்கப்பட்டு வரும்நிலையில் குறிப்பாக, இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் பாலம் அமைப்பது தொடர்பில் ஆர்வம் காண்பிக்கப்பட்டு வரும்நிலையில், இந்தப் பிரச்னையை தொடர அனுமதிப்பது இரண்டு நாடுகளுக்குமே நல்லதல்ல. இதேவேளை, வடக்கு - கிழக்குக்குள் உள்நுழைவது தொடர்பில் சீனா அதிகம் அக்கறையை காண்பிக்கும் நிலையில் இந்தப் பிரச்னையை முறையாகக் கையாளாது விட்டால் இது பிராந்திய பதற்றங்களுக்கான கருவியாகவும் மாறிப் போகலாம். ஏற்கனவே, சீனா வடபுல மீனவர்களை இலக்கு வைத்துத் திட்டங்களை மேற்கொள்ளவும் முயற்சித்தது. மீனவர்கள் பிரச்னையை ஒரு வாய்ப்பாகக் கருதியே சீனா இதன் மீது திரும்பியது.

இரண்டு பகுதி மீனவர்களுக்கும் பாதகமில்லாமல் விடயங்களை எவ்வாறு கையாளலாம்? தென்னிந்தியாவுக்கும் வடக்கு மாகாணத்துக்கும் இடையிலான மிகவும் குறுகிய எல்லைப் பகுதியால்தான் தமிழ்நாட்டு மீனவர்கள் எல்லை தாண்ட வேண்டிய நிலைமை ஏற்படுகின்றது. ஒரு குறிப்பிட்ட கடல் எல்லையில் மீன்பிடிப்பவர்கள் - ஒரு குறிப்பிட்ட தூரம் வரையில் செல்லவே முயற்சிப்பர் - அவ்வாறான சந்தர்ப்பங்களில்தான் இவ்வாறான எல்லை தாண்டிய மீன்பிடிப் பிரச்னை ஏற்படுகின்றது.

வடபுல மீனவர்களைப் பொறுத்தவரையில் இது அவர்களின் வாழ்வாதார பிரச்னை. அவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும்போது அவர்கள் ஆதங்கப்படுவதிலும் தவறில்லை. இரண்டு தரப்பு மீனவர்களின் நலன்களையும் கருத்தில்கொண்டு மனிதாபிமான அடிப்படையில் விடயங்கள் கையாளப்பட வேண்டும். மேலும், தமிழ்நாட்டு மீனவர்கள் பெருந்தொகையில் மீன்பிடியில் ஈடுபடுபவர்கள். இதன் காரணமாகவே, அவர்கள் கடல் எல்லையைத் தாண்ட முற்படுகின்றனர். இதுவே, பிரச்னையின் அடிப்படையாக இருக்கின்றது. இதுவரையில் இந்த விடயத்தை இலங்கை கடற்படை மட்டுமே கையாண்டு வந்திருக்கின்றது. இதற்கு மாறான ஒரு புதிய அணுகுமுறை தேவை.

இரண்டு நாடுகளின் கடற்படைகளும் இணைந்து ஒரு கூட்டு கண்காணிப்பு நடவடிக்கை ஒன்றைப் பற்றி சிந்திப்பதே சரியானது. இதன் மூலம், இலங்கை கடற்படை தன்னிச்சையாக தமிழ்நாட்டு மீனவர்களை கைது செய்ய முடியாத நிலைமை ஏற்படும். அதேவேளை, தமிழ்நாட்டு மீனவர்கள் எல்லை தாண்டாத வகையில் அவர்களை கட்டுப்படுத்துவதும் இலகுவானதாக அமையும். எனவே, இலங்கை - இந்திய கடற்படை கூட்டுக் கண்காணிப்பு பொறிமுறை ஒன்றைப் பற்றி இரண்டு நாட்டு அரசுகளும் சிந்திக்க வேண்டும்.

# சாவல்கட்டு இறங்குதுறை பிரச்னைக்கு தீர்வு தரக்கோரி மீனவர் போராட்டம்!



யாழ்ப்பாணம், பெப். 07

சாவல்கட்டு இறங்குதுறை பிரச்னைக்கு தீர்வு வழங்குமாறு கோரி சாவல்கட்டு கடற்றொழிலாளர்கள் நேற்று கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். அத்துடன், வடக்கு ஆளுநர் பணிமனையையும் முற்றுகையிட்டு எதிர்ப்பு தெரிவித்தனர்.

நேற்று காலை யாழ். மாவட்ட செயலகம் முன்பாக இந்தக் கவனவீர்ப்பு போராட்டம் ஆரம்பமானது. இதன்போது, போராட்டக்காரர்கள் தமது பிரச்னை குறித்து அரச அதிபரை சந்தித்து விளக்கமளித்தனர்.

இதன்பின்னர், போராட்டக்காரர்கள் பேரணியாக வடக்கு மாகாண ஆளுநர் பணிமனைக்கு சென்று நுழைவாயிலை மறித்துப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

அத்துடன், ஆளுநரை சந்தித்த பின்னரே போராட்டத்தை நிறுத்துவோம் என்று கூறினர். நண்பகல் வரை போராட்டம் தொடர்ந்த நிலையில் அங்கு வந்த வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் மு. நந்தகோபாலன் "ஆளுநர் தற்போது யாழ்ப்பாணம் இல்லை. எனவே, அவரை சந்திக்க முடியாது என்றும் எதிர்வரும் 8ஆம் திகதி ஆளுநரை சந்திக்க முடியும்", எனவும் கூறினார்.

இதையடுத்து, போராட்டத்தை தற்காலிகமாகக் கைவிடுவதாகக் கூறி போராட்டக்காரர்கள் அங்கிருந்து கலைந்து சென்றனர். (ஐ)

## பெரிய புராணம் சொற்பொழிவு!

யாழ்ப்பாணம், பெப். 07

சைவ வாழ்வியலில் பெரிய புராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சிவநெறி பிரகாசர் கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் வாராந்த பெரியபுராண சிறப்பு சொற்பொழிவு நடைபெற்று வருகின்றது.

இதன் 44ஆவது தொடர் (முனையாடுவார் நாயனார்) தெல்லிப்பழை சிவகாமி அம்பாள் சமேத சந்திரமௌலீஸ்வரர் ஆலய பிரதான மண்டபத்தில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

சேக்கிழார் பெருமானின் குருபூசையைத் தொடர்ந்து சொற்பொழிவை இளம் சைவப்புலவர் க. கயிலைவாசன் "போரில் வென்று கிடைக்கும் பணத்தை சிவனடியார்க்கு கொடுத்து திருத்தொண்டு செய்த நாயனார்" என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றுவார். (ஐ)

# ஜனாதிபதியின் வீட்டுக்கு தீ வைத்தவருக்கு பிணை!

கொழும்பு, பெப். 07

அறகலய போராட்டத்தின்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வீட்டை எரித்தார் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்டவர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

சந்தேகநபர் நேற்று செவ்வாய்க்கிழமை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோது கோட்டை நீதிவான் திலினி கமகே அவரை பிணையில் செல்ல அனுமதியளித்தார்.

சந்தேகநபர் 5 இலட்சம் ரூபாய் பெறுமதியான சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டதுடன் சம்பவம் தொடர்பிலான விசாரணைகள் நிறைவடையும் வரை நீதிமன்ற விசாரணைகளின் போது முற்படுமாறும் உத்தரவிட்டார்.

இவ்வாறு கைதான நபர், பொரலஸ்கமுவ பிரதேசத்தில் வசிக்கும் 46 வயதுடைய ஆங்கில ஆசிரியராவார். (ஐ)

# கல்வியங்காடு கிராம அபிவிருத்தி சங்கத்துக்கு புதிய நிர்வாகம் தெரிவு

யாழ்ப்பாணம், பெப். 07

கல்வியங்காடு கிராம அபிவிருத்தி ஜே/259 சங்கத்தின் இந்த ஆண்டுக்கான புதிய நிர்வாக உறுப்பினர்கள் தெரிவு அண்மையில் நடைபெற்றது.

இதன்போது தலைவராக பனை அபிவிருத்தி சபையின் ஓய்வுநிலை உத்தியோகத்தர் தி. பன்னீர்செல்வம் தெரிவு செய்யப்பட்டார். செயலாளராக சி. விஜயகுருராஜாவும் பொருளாளராக உமாசுதனும் நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

தொடர்ந்து கல்வியங்காடு ஜே/ 259 கிராம மக்களும் பயன்படுத்தும் செம்மணி இந்து மயான அபிவிருத்திக்கு 20 இலட்சம் ரூபாயை நன்கொடையாக வழங்கி புதிய எரிகொட்டகையை அமைத்துக் கொடுத்தமைக்கு தியாகி அறக்கொடை நிறுவுநர் வாமதேவன் தியாகேந்திரனுக்கு முன்னாள் கிராம அபிவிருத்தி சங்க தலைவர் சி. அண்ணாத்துரை பொன்னாடை போர்த்தி கௌரவித்திருந்தார். (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



**பெப்ரவரி - 07 புதன்கிழமை**
**சோபகிருது வருடம் - தை 23**
**நல்ல நேரம் : 09.00 - 10.30**
**ராகு காலம் : 12.00 - 01.30**
**திதி : திரையோதசி**




**மேடம்**
கணவன் – மனைவிக்குள் இருந்த மனக்கசப்புகள் நீங்கும். வியாபாரத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும். உத்தியோகத்தில் சகஊழியர்கள் மதிப்பார்கள். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**இடபம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சில நேரங்களில் மன அமைதியற்ற நிலை ஏற்படும். உத்தியோகத்தில் மறதியால் பிரச்னை வந்து நீங்கும். தர்மசங்கடமான சூழல்களை சமாளிக்க வேண்டிய நாள்.

**மிதுனம்**
மறைந்து கிடந்த திறமைகளை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். சகோதர வகையில் அனுகூலம் உண்டு. அதிகாரிகள் வலிய உதவுவார்கள். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**கடகம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். பழைய உறவினர் நண்பர்கள் தேடி வந்து பேசுவார்கள். சில புதுமைகளைச் செய்து எல்லோரின் கவனத்தையும் ஈர்ப்பீர்கள். அமோகமான நாள்.

**சிம்மம்**
புதிய திட்டங்கள் நிறைவேறும். பிள்ளைகளால் மகிழ்ச்சி தங்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவால் நினைததை முடிப்பீர்கள். புதிய பாதை தெரியும் நாள்.

**கன்னி**
எதிர்ப்புகள் அடங்கும். பழைய நண்பர்களை சந்திப்பீர்கள். பழைய கடனை நினைத்து அவ்வப்போது கலங்குவீர்கள். சக ஊழியர்களால் நிம்மதி உண்டு. உழைப்பால் உயரும் நாள்.

**துலாம்**
புதிய முயற்சிகள் வெற்றியடையும். வியாபாரத்தில் சந்தை நிலவரம் அறிந்து லாபம் சம்பாதிப்பீர்கள். உத்தியோகத்தில் உங்களின் ஆலோசனை ஏற்கப்படும். தைரியம் கூடும் நாள்.

**விருட்சிகம்**
கடந்த இரண்டு நாட்களாக இருந்த மன உளைச்சல் நீங்கி எதிலும் ஒரு தெளிவு பிறக்கும். கல்யாண முயற்சிகள் வெற்றியடையும். உத்தியோகத்தில் மேலதிகாரி மதிப்பார்.நன்மை நடக்கும் நாள்.

**தனுசு**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சோர்வு களைப்பு வந்து நீங்கும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை குறையும். கூடுதல்வேலை பார்க்க வேண்டி வரும். விழிப்புணர்வு நாள்.

**மகரம்**
எளிதாக முடிய வேண்டிய சில காரியங்களை கூடப் போராடி முடிக்க வேண்டி வரும். உத்தியோகத்தில் மேலதிகாரி உடன் மோதல்கள் வேண்டாம். அதிகம் உழைக்க வேண்டிய நாள்.

**கும்பம்**
உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். பெற்றோரின் ஆதரவு கிட்டும். உத்தியோகத்தில் அதிகாரிகள் உங்களுக்கு முன்னுரிமை தருவார்கள். மரியாதை கூடும் நாள்.

**மீனம்**
எதிர்பார்ப்புகள் நிறைவேறும். எதிர்பாராத சந்திப்பு நிகழும். வியாபாரத்தில் வேலையாட்கள் கடமையுணர்வுடன் செயல்படுவார்கள். உங்கள் கை ஓங்கும். முயற்சியில் வெற்றி பெறும் நாள்.

*ஆயுத அமைப்பு உருவாக்க முயற்சி:*

# குற்றம் உறுதிப்படுத்தப்பட்டால் நாம் தமிழர் கட்சிக்கு தடை!

**பாரதிய ஜனதா கட்சி**

சென்னை, பெப். 07

**விடுதலைப் புலிகள் போன்ற அமைப்பு ஒன்றை நாம் தமிழர் கட்சி உருவாக்க முயன்றது உறுதிப்படுத்தப்பட்டால் அந்தக் கட்சி தடை செய்யப்படும் என்று பாரதிய ஜனதா கட்சி கூறியுள்ளது.**

சேலம் ஓமலூரில் 2022 மே மாதம் ஆயுதங்களுடன் தமிழ்நாடு பொலிஸாரால் மூவர் கைது செய்யப்பட்டனர். இவர்கள், விடுதலை புலிகள் இயக்கத்தால் ஈர்க்கப்பட்டு அதற்கு இணையான ஓர் அமைப்பை நிறுவ முயன்றனர் என்று விசாரணையில் தெரிய வந்ததாகக் கூறப்பட்டது. இதைத் தொடர்ந்து நாம் தமிழர் கட்சியின் முக்கிய பிரமுகர்கள் வீட்டில் சோதனை நடத்தியுள்ளது என். ஐ. ஏ.

“விடுதலை புலிகள் அமைப்புடன் நாம் தமிழர் நிர்வாகிகள் தொடர்பில் இருப்பதாலும், அவர்களிடமிருந்து நிதி பெறுவதாலும்தான் சோதனை மேற்கொண்டதென எங்குமே என்.ஐ.ஏ சொல்லவில்லை. ஆனால்ஈ அதனை மையமாக வைத்து பா.ஜ.க-வினர் வதந்தி பரப்பிக் கொண்டிருக்கிறார்கள் என்பதே அரசியல் பழிவாங்கல் என்பதற்கு ஒரே சான்று” என்கிறார்கள் நாம் தமிழர் கட்சியினர்.

இந்த நிலையில், பா. ஜ. கவின் பொருளாளர் எஸ். ஆர். சேகர் கருத்து வெளியிடுகையில்,

“என்.ஐ.ஏ-வின் சோதனையை பழிவாங்கல் நடவடிக்கை எனப் பேசுவதெல்லாம் ஒப்பாரி. என்.ஐ.ஏ போன்ற அமைப்பு ஆதாரங்கள் இல்லாமல் ஒரு அடிகூட எடுத்து வைக்காது. நாம் தமிழர் பிரபாகரனை ஆதரித்து பேசி இளைஞர்களை தங்கள் வலைக்குள் கொண்டு வந்த கட்சி. பிரபாகரனை வைத்து பணம் சம்பாதிக்கும் முயற்சியில் ஈடுபடுகிறது.

மேலும் இந்திய அரசால் தடை செய்யப்பட்ட அமைப்பை மேற்கொண்டு எடுத்துச் செல்வது என்பது தேச விரோதமானது. இதுபோன்ற செயல்களில் ஈடுபடுபவர்கள் கடுமையாக தண்டிக்கப்பட வேண்டும். அந்த நச்சு மரம் அகற்றப்பட வேண்டும். ஒருவேளை அவர்கள்மீதான குற்றசாட்டுகள் நிரூபணமாகிறபோது இந்திய அரசால் அந்த கட்சி தடைசெய்யப்படும்” என்றார்.

மத்திய இணை அமைச்சர் எல்.முருகன் கூறுகையில்,

“தேசத்தின் ஒற்றுமை அல்லது தேசத்திற்கு எதிரான செயல்களில் நாம் தமிழர் கட்சியினர் ஈடுபட்டு இருக்கிறார்கள் என்பதை என். ஐ. ஏ. சோதனை காட்டி கொடுத்துள்ளது. என். ஐ. ஏ. நாம் தமிழர் கட்சியின் செயல்பாடுகளை தொடர்ந்து கண்காணித்த பிறகு நாட்டுக்கு எதிரான செயல்கள் செய்திருப்பதை உறுதிப்படுத்தி உள்ளனர். என். ஐ. ஏ. தேசத்துக்கும், தேச ஒற்றுமைக்கும் எதிராக செயல்படுபவர்கள் மீது நடவடிக்கை எடுத்துள்ளது. நாம் தமிழர் கட்சி தேசத்துக்கு எதிராக செயல்பட்டு கொண்டிருப்பதை இது காட்டுகிறது. தவறு செய்பவர்களிடம் கேள்வி கேட்கும் போது, ‘என்னை மிரட்டுகிறார்கள், என்னை காப்பாற்றுங்கள்’ என அலறுவார்கள். அதைதான் இப்போது தவறு செய்தவர்கள் செய்கிறார்கள்.” - என்றார்.

(ஐ)

## பா. ஜ. க. - பா. ம. க. கூட்டணி இழுபறி

சென்னை, பெப். 07

இந்திய பாராளுமன்றத் தேர்தல் விரைவில் நடைபெறவுள்ளது. தமிழகத்தில் ஆளும் கட்சியான தி. மு. க., பிரதான எதிர்க்கட்சி அ. தி. மு. க. மற்றும் பிற கட்சிகளான பா. ஜ. க., நாம் தமிழர் கட்சி தனித்தனியாக தேர்தல் பணியில் தீவிரம் காட்டி வருகின்றன.

இந்த நிலையில், மக்களவை தேர்தல் கூட்டணி தொடர்பாக பா.ஜ.க. - பா.ம.க. இடையேயான பேச்சில் இழுபறி ஏற்பட்டுள்ளது. 12 தொகுதிகள் மற்றும் ஒரு ராஜ்யசபா இடத்தை பா. ம. க. கேட்பதாகவும் பா. ஜ.க. 7 இடங்களை தர முன்வருவதாகவும் கூறப்படுகிறது. பா.ஜ.க. ஒதுக்கும் தொகுதிகளை பா.ம.க. ஏற்க முன்வராததால் பேச்சில் இழுபறி நீடித்து வருகிறது.

(ஐ)

## வெள்ள நிவாரண நிதி விவகாரம் மக்களவையில் நேற்று அமளி!

புதுடில்லி, பெப். 07

தி. மு. க. பாராளுமன்ற குழுத் தலைவர் டி. ஆர். பாலு பேசியபோது மத்திய அமைச்சர் குறுக்கிட்டதால் மக்களவையில் அமளி ஏற்பட்டது.

வரவு - செலவுத் திட்ட கூட்டத்தொடரில் தமிழகத்துக்கு வெள்ள நிவாரணத் தொகை விடுவிப்பது தொடர்பாக நீலகிரி எம். பி ஆ. ராசா நேற்று கேள்வி எழுப்பி பேசினார்.

“தேசிய பேரிடர் நிதியை பிற மாநிலங்களுக்கு ஒதுக்குவது போல், தமிழகத்துக்கும் பாரபட்சமின்றி ஒதுக்க வேண்டும்” என்று ஆ. ராசா கேட்டார்.



தொடர்ந்து, ம. தி. மு. கவின் எம். பி. கணேசமூர்த்தி, காங்கிரஸ் எம். பி. மாணிக்கம் தாகூர் உள்ளிட்டோரும் தமிழகத்துக்கு வெள்ள நிவாரணம் ஒதுக்கக் கோரி மக்களவையில் பேசினார்.

இதையடுத்து, தி. மு. க. பாராளுமன்ற குழுத் தலைவர் டி. ஆர். பாலு பேசிக் கொண்டிருக்கும்போது மத்திய இணையமைச்சர் எல். முருகன் குறுக்கீடு செய்தார். இதனால் கோபமடைந்த டி. ஆர். பாலு, நீங்கள் எம். பியாக இருக்கவும் மத்திய அமைச்சராக இருக்கவும் தகுதி இல்லாதவர் என்று தெரிவித்தார்.

(ஐ)

# நடிகர் விஷாலும் அரசியல் கட்சி ஆரம்பிக்கிறார்!

சென்னை, பெப். 07

நடிகர் விஜய் அரசியல் கட்சியை அறிவித்துள்ளார். இந்த நிலையில், நடிகர் விஷாலும் இந்த நிலையில் நடிகர் விஷாலும் கட்சி தொடங்க தயாராகவுள்ளார்.

ஏற்கனவே அரசியல் பணிகளில் விஷால் தொடர்ந்து ஆர்வம் காட்டி வருகிறார். சென்னை ஆர்.கே.நகர் சட்டமன்ற இடைத்தேர்தலில் போட்டியிட விரும்பினார். ஆனால் அவரின் வேட்பு மனு தள்ளுபடி ஆகி விட்டது.

இந்த நிலையில், தனது ரசிகர் மன்றத்தை ‘விஷால் மக்கள் நல இயக்கம்’ என்று பெயர் மாற்றம் செய்து அனைத்து மாவட்டங்களிலும் பொறுப்பாளர்களை நியமித்துள்ளார்.

தற்போது பாராளுமன்ற தேர்தல் நெருங்கும் நிலையில் அரசியல் கட்சியை தொடங்க முடிவு செய்துள்ளார். விரைவில் கட்சி பெயரை அறிவிப்பார் என்றும், சட்டமன்ற தேர்தலில் விஷால் கட்சி போட்டியிடும் என்று கூறப்படுகின்றது.

(ஐ)

# சிவில் குற்றங்களில் ஈடுபடுவோரை வீட்டுக் காவலில் வைக்கத் திட்டம்!

## இராஜாங்க அமைச்சர் அனுராத ஜயரத்ன



கொழும்பு, பெப். 07

**சிறைச்சாலைகளில் நெரிசலைக் குறைக்கும் நோக்கில் சிவில் குற்றங்களில் ஈடுபட்ட அனைவரையும் வீட்டுக் காவலில் வைக்கும் வேலைத்திட்டம் இவ்வருடம் நடைமுறைப்படுத்தப்படும் என நீதி மற்றும் சிறைச்சாலை விவகார இராஜாங்க அமைச்சர் அனுராத ஜயரத்ன தெரிவித்துள்ளார்.**

இதற்கான சட்டங்களை தயாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கையை வழங்கிய பின்னர், சட்ட வரைவுப் பிரிவினால் அதற்கான சட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருவதாகவும், பணிகள் நிறைவடைந்த பின்னர் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து ஐந்தவருடமே சட்டமாக்கப்படும் எனவும் அவர் கூறினார்.

ஐக்கிய நாடுகள் சபையின் போதைப்பொருள் மற்றும் குற்றத்தடுப்பு அலுவலகம் 05 மில்லியன் ரூபா பெறுமதியான பேக்கரி உபகரணங்களை பல்லேகல திறந்தவெளி சிறைச்சாலைக்கு வழங்கியதன் பின்னர் கைதிகளுக்கான பேக்கரி பயிற்சிப் பாடசாலையை திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்ட இராஜாங்க அமைச்சர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சிறைச்சாலைகளில் சுமார் 13,000 கைதிகள் தங்குவதற்கு இடவசதி உள்ளது. ஆனால் நீதி நடவடிக்கையின் மூலம் நாளாந்தம் கைது செய்யப்படும் கைதிகளின் எண்ணிக்கை 33,000 ஆக அதிகரித்துள்ளது.

தற்போது சிறையில் உள்ள கைதிகளில் 65 வீதம் பேர் மட்டுமே போதைப்பொருள் குற்றச்சாட்டுக்கு உள்ளானவர்கள். அவர்களை மீண்டும் சமூகத்தில் விடுவிப்பதற்குப் பதிலாக, அவர்களுக்கு மறுவாழ்வு அளித்து, அவர்களுக்கு சில தொழில் பயிற்சிகளை வழங்குவதே அரசின் நோக்கம்.

சிவில் குற்றங்களில் ஈடுபட்ட அனைவரையும் சிறையில் கழிப்பதற்குப் பதிலாக வீட்டுக் காவலில் வைக்கும் முறை அறிமுகப்படுத்தப்பட்டதன் மூலம் தற்போது சிறைச்சாலையில் நிலவும் நெரிசலுக்கு தீர்வு ஏற்படும்.

போதைப்பொருள் குற்றங்களுக்காக கைது செய்யப்பட்டவர்களுக்கு தண்டனை வழங்குவது மட்டுமன்றி அவர்களின் உடல்நலப் பிரச்னைகளுக்கு தீர்வுகளை வழங்கி அவர்களை மீண்டும் ஒருங்கிணைக்கும் பொறுப்பு சிறைச்சாலைத் திணைக்களத்திற்கு உள்ளது- என்றார். (அ)

# மேலும் 1,300 வைத்தியர்கள் மார்ச் மாதத்தில் நியமனம்!

கொழும்பு, பெப். 07

வைத்தியர் பற்றாக்குறைக்கு தீர்வாக எதிர்வரும் மார்ச் மாதம் அரச வைத்தியசாலைகளுக்கு மேலும் 1300 வைத்தியர்கள் நியமிக்கப்படவுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அவர்கள் தற்போது பயிற்சி நிறைவடையும் நிலையில் உள்ளதாக சுகாதார செயலாளர், விசேட வைத்தியர் பாலித மஹிபால தெரிவித்தார்.

கடந்த ஆண்டும் பயிற்சி முடித்த 590 வைத்தியர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டது. இதுவரை காலமும் வெற்றிடமாக இருந்த அரச வைத்தியசாலைகளுக்கே இவர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக செயலாளர் குறிப்பிட்டார்.

அதனடிப்படையில், எதிர் காலத்தில் வைத்தியர்கள் பற்றாக்குறைக்கு தீர்வு காணப்படும் என செயலாளர் குறிப்பிட்டார். (அ)

# மாடியில் வேலை செய்தவர் தவறி கீழே விழுந்து மரணம்!

யாழ்ப்பாணம், பெப். 07

கொக்குவில் பகுதியில் 2ஆவது மாடி கட்டடத்தில் வேலை செய்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் தவறி கீழே விழுந்த நிலையில் உயிரிழந்துள்ளார். இச்சம்பவத்தில் இளவாலை - பெரியவிளான் பகுதியை சேர்ந்த சூசை சுதர்சன் (வயது 38) என்ற குடும்பஸ்தரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் நேற்று முன் தினம் திங்கட்கிழமை வேலை செய்துகொண்டிருந்தவேளை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதன்போது அவர் மீட்கப்பட்டு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இந்நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அறிக்கையில் நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (அ)

# போலி நாணயத் தாள்களுடன் ஒருவர் மொறட்டுவையில் கைது!

கொழும்பு, பெப். 07

போலி நாணயத் தாள்களை தம்வசம் வைத்திருந்த ஒருவர் மொரட்டுவை - எகொட உயன பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவரிடம் இருந்து 5,000 ரூபாய் பெறுமதியான 30 நாணய தாள்கள் மீட்கப்பட்டுள்ளன.

பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலை அடுத்து சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். (அ)

# அனுமதிப் பத்திரமின்றி தேக்கு மர பலகை கொண்டு சென்றவர் கைது

யாழ்ப்பாணம், பெப். 07

புத்தூர் பகுதியில் அனுமதிப் பத்திரமின்றி தேக்கு மரப் பலகைகளை சட்டவிரோதமாக கொண்டுசென்றவர் கைது செய்யப்பட்டார்.

வன்னிப் பகுதியில் இருந்து லொறியில் தேக்கு மரப் பலகைகள் கொண்டுவரப்பட்டபோதே காங்கேசன்துறை பிராந்திய குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாரால் சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

மேலதிக சட்ட நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்ட பொருட்களுடன் சந்தேக நபரை அச்சுவேலி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

# கார் கடத்திய இருவர் கைது

கொழும்பு, பெப். 07

கட்டுநாயக்க - எவரிவத்தை பகுதியில் கார் ஒன்றை கடத்திச் சென்ற சம்பவம் தொடர்பில், இரண்டு இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் நேற்று முன் தினம் வீதியை மறித்து, குறித்த காரை கடத்தி சென்றதாக தெரிவிக்கப்படுகின்றது.

காரின் கொடுப்பனவு தொடர்பில் பிரச்னைகள் உள்ளதாக தெரிவித்து அதனை கடத்தியுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

கைதானவர்கள் மினுவாங்கொடை பகுதியைச் சேர்ந்த 20 வயதுடையவர்கள் என தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# மரக்கறி விலை வீழ்ச்சி!

கொழும்பு, பெப். 07

கடந்த நாட்களுடன் ஒப்பிடுகையில் நேற்று மரக்கறிகளின் விலையில் சிறிதளவு வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

இதன்படி, 1 கிலோகிராம் கரட்டின் விலை 690 ரூபாயாக பதிவு செய்யப்பட்டது.

அதேபோன்று 1 கிலோகிராம் வெண்டிக்காய் 490 ரூபாயாகவும், கோவாவின் விலை 390 ரூபாயாகவும் பதிவாகியுள்ளது.

அத்துடன் 1 கிலோகிராம் போஞ்சி 600 ரூபாயாகவும், 1 கிலோகிராம் லீக்ஸ் 490 ரூபாயாகவும் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# கந்தக்காடு மோதல் சம்பவம் கைதான 34 பேரும் மறியலில்

கொழும்பு, பெப். 07

வெலிக்கந்தை - கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்ற மோதல் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள 34 பேரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

குறித்த சந்தேகநபர்கள் பொலன்னறுவை நீதவான் நீதிமன்றில் இன்று முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

இதன்போது, அவர்களில் 20 பேரை எதிர்வரும் 16ஆம் திகதி வரையிலும், ஏனைய 14 பேரையும் எதிர்வரும் 8ஆம் திகதி வரையிலும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்தில் நேற்று முன் தினம் இரண்டு குழுக்களுக்கு இடையில் ஏற்பட்ட மோதலில் இராணுவ சிப்பாய் ஒருவர் உட்பட 9 பேர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வெலிகந்தை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அவர்கள் மேலதிக சிகிச்சைக்காக பொலன்னறுவை மாவட்ட பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர்.

இந்த மோதல் தொடர்பில் 34 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

குறித்த தாக்குதல் சம்பவத்தினை அடுத்து தலைமறைவாகியுள்ள சந்தேகநபர் ஒருவரை தேடும் நடவடிக்கைகளில் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர்.

கந்தகாடு புனர்வாழ்வு நிலையத்தில் தொடர்ந்தும் கைதிகளுக்கு இடையில் மோதல் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன.

இதேவேளை, புனர்வாழ்வு நிலையங்களில் உள்ள கைதிகள் தொடர்ந்தும் வன்முறையில் ஈடுபட்டால் அவர்களை புனர்வாழ்வு நடவடிக்கைகளில் இருந்து நீக்கி விளக்கமறியலில் வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என நீதி மற்றும் சிறைச்சாலைகள் அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

வெலிகந்தை - கந்தகாடு புனர்வாழ்வு நிலையத்தில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

அதேநேரம், கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்தில், கைதிகளுக்கு இடையில் ஏற்படும் முரண்பாடுகள் தொடர்பில் உடனடி அறிக்கை ஒன்றையும் நீதி மற்றும் சிறைச்சாலைகள் அமைச்சர் விஜேதாச அதன் பணிப்பாளரிடம் கோரியுள்ளார். (அ)

# கெஹலியவின்மீது பெரமுன நடவடிக்கை ஏதும் எடுக்காது!

கொழும்பு, பெப். 07

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல விவகாரம் நீதிமன்றத்தின் முன்னிலையில் உள்ளதால் பொதுஜன பெரமுன அவருக்கு எதிராக எந்த நடவடிக்கைகளையும் எடுக்காது என கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

தரம் குறைந்த இம்யுனோகுளோபிளின் மருந்தினை இறக்குமதி செய்த குற்றச்சாட்டில் முன்னாள் சுகாதார அமைச்சர்




கெஹலிய ரம்புக்வெல கைது செய்யப்பட்டுள்ள நிலையிலேயே அவர் இதனை கூறினார்.

இந்த விவகாரம் நீதிமன்றத்தின் முன்னிலையில் உள்ளதால் இன்னமும் இறுதி தீர்ப்புகள் வெளியாகததால் கெஹலிய ரம்புக்வெலவுக்கு எதிராக பொதுஜன பெரமுன எந்த நடவடிக்கையையும் எடுக்காது என சாகர காரியவசம் குறிப்பிட்டார்.

கெஹெலிய ரம்புக்வெல குற்றவாளியா இல்லை என்பதை நீதிமன்றம் தீர்மானிக்கவேண்டும் எனவும் தெரிவித்துள்ள அவர், அது இடம்பெறும்வரை கட்சி எதனையும் செய்ய முடியாது எனவும் கூறினார். (அ)

# நிகழ்நிலை பாதுகாப்பு சட்டத்தில் திருத்தம் செய்வதில் அரசு தீவிரம்

## கடும் எதிர்ப்பு - அழுத்தங்களை அடுத்து

கொழும்பு, பெப். 07

**நிகழ்நிலை பாதுகாப்பு சட்டத்தினால் டிஜிற்றல் பொருளாதாரத்திற்கு ஏற்படக்கூடிய பாதிப்புகள் குறித்து அதனுடன் தொடர்புபட்டவர்கள் கடும் கரிசனைகளை தொடர்ந்தும் வெளியிட்டு வருகின்ற சூழ்நிலையில் புதிய சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது.**

அரசாங்கத்தின் புதிய சட்டம் குறித்த கரிசனைகளும் விமர்சனங்களும் கண்டனங்களும் தொடர்ந்து வெளியாகும் நிலையில் புதிய திருத்தங்களை உருவாக்கியுள்ளதாக தெரிவித்துள்ள பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் அதிகாரியொருவர், இரண்டு வாரங்களில் இவற்றை அமைச்சரவையின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கவுள்ளதாக கூறினார்.

கூகுள், டுவிட்டர், யாகு, மெட்டா, அமேசன் போன்ற சர்வதேச தொழில்நுட்ப நிறுவனங்களுடன் கலந்துரையாடலை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

அமைச்சரவையின் அங்கீகாரத்தின் பின்னர் புதிய திருத்தங்களை உள்வாங்கும் நடவடிக்கைகளை நாங்கள் முன்னெடுப்போம் என அந்த அதிகாரி தெரிவித்தார். (அ)

# 14 மாதங்கள் நிரம்பிய குழந்தை யாழில் காய்ச்சலால் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், பெப். 07

யாழ்ப்பாணத்தில் 14 மாதங்கள் நிரம்பிய குழந்தை ஒன்று நேற்று முன் தினம் திங்கட்கிழமை உயிரிழந்தமை சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதன்போது சாவகச்சேரி - இத்தியடி பகுதியை சேர்ந்த குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

குறித்த குழந்தை இரண்டு நாட்கள் காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் குழந்தை நேற்று முன் தினம் திங்கட்கிழமை காலை 8 மணியளவில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டது. இருப்பினும் சிகிச்சை பலனின்றி அன்று பி.ப 1 மணியளவில் குழந்தை உயிரிழந்தது.

குழந்தையின் சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (அ)

# கடந்த 24 மணித்தியாலங்களில் 2 கொலைச் சம்பவங்கள் பதிவு!

கொழும்பு, பெப். 07

கடந்த 24 மணித்தியாலங்களில் நாட்டில் இரண்டு கொலை சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

அந்த வகையில், தங்காலை மற்றும் சூரியவெவ ஆகிய பகுதிகளில் இருந்து இந்த கொலைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

தங்காலை - குடாவெல்ல பகுதியில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

நேற்று காலை குறித்த நபரின் வீட்டிற்குள் நுழைந்த சிலர் அவரை தாக்கி விட்டு தப்பிச் சென்றதாக காவல்துறை தெரிவித்துள்ளது.

இதேவேளை, சூரியவெவ - பெத்தேவெவ பகுதியில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்ட 38 வயதான பெண் ஒருவர் பலியானார்.

தாக்குலுக்கான காரணம் குறித்த தகவல்கள் வெளியாகவில்லை.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை காவல்துறையினர் முன்னெடுத்து வருகின்றனர்.

# போராட்டத்தில் பொலிஸ் தலையீடு; சர்வதேச மன்னிப்புச் சபை கவலை

கொழும்பு, பெப். 07

இலங்கையின் 76 சுதந்திர தினத்தன்று அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டவர்களுக்கு எதிராக பொலிஸார் சட்டவிரோத பலத்தை பயன்படுத்தியது குறித்தும் கடந்த சில வாரங்களாக நாட்டின் பல பாகங்களில் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு எதிரான ஒடுக்குமுறை குறித்தும் கரிசனை கொண்டுள்ளதாக சர்வதேச மன்னிப்புச் சபையின் தென்னாசியாவுக்கான பிரிவு தெரிவித்துள்ளது.

கிளிநொச்சியில் பொலிஸார் அமைதியான முறையில் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக கண்ணீர்ப் புகைப் பிரயோகத்தை மேற்கொண்டதுடன் நீர்த்தாரை பிரயோகத்தையும் மேற்கொண்டனர். ஆர்ப்பாட்டக்காரர்களை வீதிகளில் இழுத்துச் சென்றனர். யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் சிலரை கைது செய்தனர் எனவும் தெரிவித்துள்ள சர்வதேச மன்னிப்புச்சபை, இலங்கை அதிகாரிகள் உடனடியாக ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு எதிரான இந்த கடுமையான நடவடிக்கைகளை-அச்சுறுத்தல்கள், மிரட்டல்கள், பழிவாங்கல்களை நிறுத்தவேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

அமைதியான ஆர்ப்பாட்டங்களுக்கான சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டிய அமைதியான முறையில் ஒன்றுகூடுவதற்கான உரிமையை மக்கள் பயன்படுத்துவதற்கான சூழலை பாரபட்சமின்றி ஏற்படுத்தவேண்டிய கடப்பாடு இலங்கைக்கு சர்வதேச சட்டங்களின் கீழ் உள்ளது எனவும் சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது. (அ)

# சபாநாயகர் சட்டத்தை மீறிவிட்டார்!

## அவசரமாக ஒன்றுக்கூடும் எதிர்க்கட்சிகள்

கொழும்பு, பெப். 07

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன அரசியலமைப்பு மற்றும் பாராளுமன்ற நிலையியல் கட்டளைச் சட்டத்தை மீறி செயல்பட்டுள்ளதாக எதிர்க்கட்சிகள் குற்றச்சாட்டியுள்ளன.

கொழும்பில் நடைபெற்ற ஊடகச் சந்திப்பில் கருத்து வெளியிட்ட முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ்,

“அரசியல் யாப்பிற்கு முரணாக நிகழ்நிலை காப்புச் சட்டத்தில் சபாநாயகர் கையொப்பமிட்டுள்ளார். அதாவது நிகழ்நிலை காப்புச் சட்டத்தில் திருத்தங்களை செய்யவேண்டும் என உயர் நீதிமன்றம் சபாநாயகருக்கு அறிவித்திருந்தது.

ஆனால் உயர் நீதிமன்ற பரிந்துரைகளை ஏற்காமல் திருத்தங்களையும் செய்யாமல் நிகழ்நிலை காப்புச் சட்டம் பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

இது அரசியல் யாப்பிற்கு முரணானது என சுட்டிக்காட்டியுள்ள எதிர்கட்சிகள் சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டு வர தீர்மானித்துள்ளன.

தற்போதைய அரசாங்கம் மனித உரிமைகளை அப்பட்டமாக மீறியுள்ளதுடன், சர்வாதிகார ஆட்சியை நோக்கி நகர்கிறது. நிகழ்நிலை காப்புச் சட்டம் இலங்கையின் அரசியலமைப்புக்கு உட்பட்டு நிறைவேற்றப்பட்ட சட்டம் அல்ல.

தேசிய அளவிலும், சர்வதேச அளவிலும் இந்தச் சட்டத்திற்கான எதிர்மறையான விளைவுகளை நாடு அனுபவிக்க நேரிடும்.

ஐக்கிய மக்கள் சக்தியின் அமைதிப் போராட்டத்திற்கு எதிராக அரசாங்கம் மேற்கொண்ட நீர்தாரை மற்றும் கண்ணீர்ப்புகைத் தாக்குதலையும் வன்மையாக கண்டிக்கிறோம்.

வரலாற்றில் எதிர்க்கட்சித் தலைவர் ஒருவருக்கு நீர்தாரை மற்றும் கண்ணீர்ப்புகை தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.” எனவும் சுட்டிக் காட்டினார்.

இதேவேளை, சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்படவுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவும் கூறியுள்ளார்.

விரைவில் பாராளுமன்றத்தில் உள்ள எதிர்க்கட்சிகள் இந்த விவகாரம் குறித்து ஒன்றுக்கூடி கலந்துரையாட திட்டமிட்டுள்ளதாக தெரியவருகிறது. (அ)

# இரண்டு ஆண்டுகளில் 5 பில்லியன் டொலர்கள் ஈர்க்க இலங்கை திட்டம்

கொழும்பு, பெப். 07

இலங்கை அடுத்த இரண்டு ஆண்டுகளில் சுமார் 5 பில்லியன் அமெரிக்க டொலர் வெளிநாட்டு நிதியை பெறும் என வெளியுறவு அமைச்சர் அலிசப்ரி நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

ரொய்ட்டர்ஸ் செய்திச் சேவைக்கு அளித்த நேர்காணலில் அமைச்சர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்டுள்ள அமைச்சர்,

“1948 இல் சுதந்திரம் அடைந்ததிலிருந்து மோசமான நிதி நெருக்கடியைத் தூண்டிய அந்நியச் செலாவணி இருப்புக்களின் கடுமையான பற்றாக்குறையை எதிர்நோக்கி வருகின்றது.

2022 ஆம் ஆண்டு மே மாதத்திலிருந்து இலங்கை அதன் வெளிநாட்டுக் கடனைத் திருப்பிச் செலுத்தவில்லை.

இருதரப்பு கடன் மறுசீரமைப்பில் சுமார் 11 பில்லியன் அமெரிக்க டொலர்களை இலங்கை முன்னேற்றம் கண்டுள்ளதுடன், பத்திரப் பதிவுதாரர்கள் உட்பட அனைத்து முக்கிய கடன் வழங்குநர்களுடனும் மே மாதத்திற்குள் உடன்படிக்கைகளை மேற்கொள்ளும் என தெரிவித்தார்.

நெருக்கடியின் போது இடைநிறுத்தப்பட்ட முக்கிய உட்கட்டமைப்பு திட்டங்களை மீள ஆரம்பிப்பதில் கவனம் செலுத்தும் என்றும் இதில் நெடுஞ்சாலை, கொழும்புக்கு அருகிலுள்ள முக்கிய விமான நிலைய விரிவாக்கம் மற்றும் ஜப்பானுடன் 2 பில்லியன் அமெரிக்க டொலர் இலகு ரயில் திட்டம் ஆகியவை உள்ளடங்கும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

அடுத்த 12 முதல் 24 மாதங்களுக்குள், திட்டங்களின் அடிப்படையில் மற்றும் சில அரசுக்கு சொந்தமான நிறுவனங்களின் விற்பனையிலிருந்து சுமார் 5 பில்லியன் அமெரிக்க டொலர் மதிப்புள்ள வெளிநாட்டு நாணயத்தை இலங்கைக்குள் வரவைப்பதற்கு எதிர்பார்க்கிறோம்”-என்றார். (அ)

# புதிய கட்சி தொடங்கினார் பொன்சேகா

கொழும்பு, பெப். 07

ஐக்கிய மக்கள் சக்தியின் துணைத் தலைவரான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவின் தலைமையில் புதிய கட்சி தொடங்கப்பட்டுள்ளது.

அக்கட்சியின் உத்தியோக பூர்வ முகநூல் பக்கம் ஜனவரி மூன்றாம் திகதி உருவாக்கப்பட்டது.

இந்த முகநூல் பக்கத்தில் 2024ஆம் ஆண்டுக்கான சரத் பொன்சேகா என்ற பதிவுகள் வெளியாகியுள்ளன.

நாட்டின் முன்னேற்றத்திற்கு கட்சி பேதமின்றி தேசிய வளர்ச்சிக் கொள்கைகளின்படி நடக்க வேண்டும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அண்மையில், முன்னாள் இராணுவத் தளபதி தயா ரத்நாயக்கவை ஐக்கிய மக்கள் சக்தியில் இணைத்தமைக்கு சரத் பொன்சேகா கடும் எதிர்ப்பு தெரிவித்திருந்தார்.

அத்துடன், அக்கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கும் இடையில் சர்ச்சை நிலை உருவாகியுள்ளது.

தயா ரத்நாயக்கவை கட்சியில் இணைத்துக் கொண்டால், கோட்டாபய ராஜபக்சவையும் கட்சியில் இணைத்துக் கொள்ள முடியும் என சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் தயா ரத்நாயக்க ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்துள்ள நிலையில், அந்தக் கட்சிக்குள் குழப்பம் ஏற்பட்டுள்ளது.

இதனால், கட்சி விரைவில் பிளவுபடுவதற்கான வாய்ப்புகள் இருப்பதாகவும் அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (அ)

# வடமராட்சி கிழக்கு கடற் பகுதியில் இறந்து கரையொதுங்கும் ஆமைகள்!

யாழ்ப்பாணம், பெப். 07

வடமராட்சி கிழக்கு கடற்பரப்பில் அண்மைக்காலமாக இறந்தநிலையில் ஆமைகள் சில கரையொதுங்கி வருகின்றன.

கட்டைக்காட்டு கடற்கரையில் நேற்று முன் தினம் திங்கட்கிழமை இறந்த நிலையில் இரண்டு ஆமைகள் கரையொதுங்கியுள்ளன.

கடல் கொந்தளிப்பாக காணப்படுவதால் காயமடைந்த ஆமைகளே இவ்வாறு தொடர்ச்சியாக இறந்து தமது பிரதேசத்தில் அதிகளவு கரையொதுங்குவதாக அப்பகுதி மீனவர்கள் தெரிவித்துள்ளனர். (அ)

# வடக்கில் வருமானம் குறைந்த மாணவரின் பாடசாலை அடைவுமட்டம் மிகவும் குறைவு

## கல்வி அபிவிருத்தி கலந்துரையாடலில் சுட்டிக்காட்டு



வவுனியா, பெப். 07

**வடக்கில் பொருளாதாரத்தில் நலிவடைந்த மாணவர்களின் பாடசாலைக்கான அடைவுமட்டங்கள் மிகவும் குறைவாக இருப்பதாக வடக்கு மாகாணக் கல்வி அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடலில் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.**

வடமாகாண கல்வி அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் வவுனியா நகரசபை மண்டபத்தில் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தலைமையில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

இதன்போது வடமாகாணங்களின் கல்வி நிலமை தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டதுடன், அதில் ஏற்படுத்தப்பட வேண்டிய மாற்றங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

அத்துடன் 2018 தொடக்கம் 2022 வரை க.பொ.த.சாதாரண மற்றும் உயர்தரபரீட்சைகளில் வடக்குமாகாண மாணவர்களின் சித்திவிகிதங்கள் ஒப்பீடு செய்யப்பட்டதுடன், மாணவர்களின் அடைவுமட்டங்களை அதிகரிப்பதற்கான வழிமுறைகள் தொடர்பாகவும் கருத்துரைகள் முன்வைக்கப்பட்டன.

அத்துடன் வடமாகாணத்தை பொறுத்தவரை வருமானம் குறைந்த மாணவர்களின் அடைவுமட்டங்களே மிகவும் குறைவாகக் காணப்படுகின்றது.

எனவே அவர்களை இனம் கண்டு அந்த மாணவர்களின் அடைவுமட்டங்களை அதிகரிக்கவேண்டிய தேவை தொடர்பாக அறிவுறுத்தல்கள் விடுவிக்கப்பட்டன.

நிகழ்வில் கிராமிய இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான், வடக்கு மாகாண ஆளுநர் எஸ்.எம்.சாள்ஸ், வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன், கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் காயத்திரி அபேகுணசேகர, மற்றும் பிரதிக்கல்வி பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் அதிபர்கள் கலந்து கொண்டனர்.

(அ)

# சாதனை முயற்சியில் யாழ். இளைஞர்கள்!




யாழ்ப்பாணம், பெப். 07

இலங்கையில் சுற்றுலாத் துறையை ஊக்குவிக்கும் வகையில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மூன்று இளைஞர்கள் சுற்றுலாத் திட்டமொன்றை ஆரம்பித்துள்ளனர்.

இத்திட்டத்தின் படி, மூன்று இளைஞர்களும் முச்சக்கர வண்டி மூலம் இலங்கையின் 25 மாவட்டங்களையும் 40 நாட்களில் சுற்றிவரத் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சுற்றுலாவானது யாழ்ப்பாணம் - பருத்தித்துறை - சக்கோடை முனையில் இருந்து ஆரம்பிக்கப்பட்டது. இது குறித்து குறித்த இளைஞர்கள் கருத்துத் தெரிவிக்கையில்" நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக சுற்றுலாத்துறையானது வீழ்ச்சி அடைந்துள்ளதால் நாட்டின் பொருளாதாரம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது.

எனவே சுற்றுலாத் துறையை ஊக்குவிக்கும் விதமாக, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை நாட்டுக்குள் வரவழைத்து, அதன்மூலம் கிடைக்கும் வருவாயை அதிகரித்து பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் நோக்கில் இந்த இத் திட்டத்தினை நாம் ஆரம்பித்துள்ளோம்" இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

(அ)





# உடுவில் மகளிர் கல்லூரியின் 200ஆவது ஆண்டு நிறைவு விழா!

யாழ்ப்பாணம், பெப். 07

உடுவில் மகளிர் கல்லூரியின் இருநூறாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கொண்டாட்ட நிகழ்வுகள் பாடசாலையில் இடம்பெற்றன.

கல்லூரி மண்டபத்தில் நேற்று காலை 8 மணியளவில் கல்லூரியின் அதிபர் ரொசானா மதுரமதி குலேந்திரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கல்லூரியின் முன்னாள் அதிபர் சிரானி மில்ஸ் கலந்து கொண்டார்.

இதன்போது இருநூறாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கேக் வெட்டப்பட்டதுடன், இரண்டு இலச்சினைகள், பாடல் மற்றும் கல்லூரி மாணவிகளின் கலை கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்றன.

குறித்த நிகழ்வில் தென்னிந்திய திருச்சபை பேராயர் கலாநிதி வே.பத்மதாயாளன், தென்னிந்திய திருச்சபை முன்னாள் பேராயர் ஜெபநேசன், கல்லூரி ஆசிரியர்கள், மாணவிகள், பழைய மாணவிகள், பெற்றோர், நலன்விரும்பிகள் என பலரும் கலந்துகொண்டனர்.

(அ)

# போலியான அனுமதிப்பத்திர கடிதம் அமைச்சின் செயலரிடம் விசாரணை!

கொழும்பு, பெப். 07

தெஹிவளை கடற்கரையில் ஹோட்டல் ஒன்றை நிர்மாணிப்பதற்கு, கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளரின் கையொப்பத்தைப் போலியாகப் போட்டு அனுமதியளித்து கடிதம் ஒன்றை வழங்கிய குற்றச்சாட்டின் பேரில், இராஜாங்க அமைச்சின் முன்னாள் செயலாளர் ஒருவர் தொடர்பில் பொலிஸ் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பொலிஸ் விசேட குழுவொன்று முன்னாள் இராஜாங்க அமைச்சின் செயலாளரிடம் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த முன்னாள் அரச அமைச்சின் செயலாளருக்கு எதிராக சட்டமா அதிபரின் ஆலோசனையின் பின்னர் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அண்மையில் சர்ச்சையை ஏற்படுத்திய தெஹிவளை கடற்கரைக்கு அருகில் அமைந்துள்ள ஹோட்டல் தொடர்பில் பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளின் போதே இந்த கடிதம் தொடர்பான தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஜனவரி 1ஆம் திகதி, கரையோர பாதுகாப்பு திணைக்களத்தினர், இது சட்டவிரோதக் கட்டுமானம் எனக் குறிப்பிட்டு பொலிஸ் பாதுகாப்புடன் இடிக்கத் தயாராகி வந்தனர்.

ஹோட்டல் இடிக்கும்போது, ஹோட்டலின் இயக்குநர்கள் என்று தங்களை அடையாளப்படுத்திக் கொண்ட இருவர் ஆவணங்களை வழங்கும்போது, சம்பந்தப்பட்ட அனைத்து நிறுவனங்களின் முறையான அனுமதியுடன் கட்டப்பட்டதாகக் கூறியுள்ளனர்.

அவற்றில், கட்டுமானப் பணிக்கு, கடலோரப் பாதுகாப்புத் திணைக்களம் அனுமதி வழங்கியதாகக் கடிதமும் வந்துள்ளது.

அந்த கடிதம் எப்படி கிடைத்தது என்று விசாரித்தபோது, அப்போது கடலோர பாதுகாப்புக்கு பொறுப்பான இராஜாங்க அமைச்சின் செயலாளரே கடிதம் கொடுத்ததாக இயக்குநராக காட்டிக்கொண்டவர் கூறியிருந்தார்.

விசாரணையில், அப்படியொரு கடிதம் கரையோர பாதுகாப்பு திணைக்களத்தால் வழங்கப்படவில்லை என்பதும், அது போலியான கடிதம் என்பதும் கண்டுபிடிக்கப்பட்டது.

விசாரணையில் தெரியவந்த தகவலின்படி, இராஜங்க அமைச்சின் முன்னாள் செயலாளரே, ஹோட்டல் இயக்குநரிடம் கடிதம் கொடுத்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக, மூத்த பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு சந்தேக நபர்களை கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

# மனைவியின் சிகிச்சைக்குப் பணம் இல்லாததால் மனைவியுடன் தற்கொலைக்கு முயன்ற கணவன்!

கொழும்பு, பெப். 07

மனைவிக்கு ஏற்பட்ட நோய்க்கு சிகிச்சையளிக்க போதிய பண வசதி இல்லாததால் மனைவிக்கு விசம் கொடுத்து, கணவனும் விசம் அருந்தி தற்கொலைக்கு முயன்ற சம்பவமொன்று சூரியவெவ பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வெனிவெல்ஹார பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

சூரியவெவ வெனிவெல்ஹார பிரதேசத்தில் வசிக்கும் 58 வயது மற்றும் 54 வயதுடைய கணவன் மனைவி இருவருமே விசம் அருந்தி தற்கொலைக்கு முயன்றுள்ளனர்.

54 வயதான மனைவி முதுகுத்தண்டில் ஏற்பட்ட குறைபாடு காரணமாக நீண்ட காலமாக நோய் நிலைமையில் பாதிக்கப்பட்டுள்ளார். அவரது நோய்க்கு சிகிச்சையளிப்பதற்காக அதிக பணம் செலவிடவேண்டியுள்ளது.

இந்நிலையில், தனது மனைவியின் வைத்திய செலவுக்கு போதிய பணம் இல்லாததால் சுதந்திர தினத்தன்று மாலை 4.30 மணியளவில் கணவன் மனைவிக்கு விசம் கொடுத்து தானும் அருந்தி தற்கொலைக்கு முயன்றுள்ளார்.

விசம் அருந்தி வீட்டில் ஆபத்தான நிலையில் இருந்த கணவன் மனைவியை அயலவர்கள் சிகிச்சைக்காக சூரியவெவ வைத்தியசாலையில் அனுமதித்த நிலையில், அவர்கள் மேலதிக சிகிச்சைக்காக அம்பாந்தோட்டை பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

மேலும் குறித்த பெண் நீண்ட காலமாக நோயினால் அவதிப்பட்டு வந்ததாகவும், அதற்கான சிகிச்சையை பெற்றுக்கொள்ளும் பொருளாதார நிலை இல்லாத காரணத்தினால் தம்பதியினர் கடும் விரக்தியில் இருந்ததாகவும் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

# இந்திய துணை தூதுவருடன் தமிழரசு எம்.பிக்கள் சந்திப்பு!

மட்டக்களப்பு, பெப். 07

**இந்திய துணை தூதுவர் சத்யஞ்சல் பாண்டேக்கும், தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களான இடையிலான சந்திப்பொன்று நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.**

இதில் வடக்கு-கிழக்கில் குறிப்பாக கிழக்கில் இந்திய அரசினால் மேற்கொள்ளப்பட இருக்கும் அபிவிருத்தி மற்றும் வாழ்வாதாரத் திட்டங்கள் பற்றி கலந்துரையாடப்பட்டதுடன் மயிலத்தமடு, மாதவனை பண்ணையாளர்களின் பிரச்னை தொடர்பிலும் ஆராயப்பட்டது.

இதில் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களான இரா.சாணக்கியன், த. கலையரசன், முன்னாள் மாநகர முதல்வர் தி. சரவணபவன், உட்பட மட்டக்களப்பு தமிழரசுக்



கட்சியின் வாலிபர் முன்னணி தலைவர், செயலாளர் மற்றும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# காக்காச்சிவட்டை பகுதியில் புதிய நெல்லின அறுவடை விழா



காரைதீவு, பெப். 07

வெல்லாவெளி பிரதேசத்தில் உள்ள காக்காச்சிவட்டைப் பிரிவில் செய்கை பண்ணப்பட்ட ஏ.ரி. 378 புதிய நெல்லின அறுவடை விழா நேற்று முன் தினம் திங்கட்கிழமை நடைபெற்றது.

காக்காச்சிவட்டை விவசாய போதனாசிரியர் தெ.கோபி தலைமையில் அலியார்வட்டை கண்டத்தில் முன்மாதிரி துண்டமாக செய்கைபண்ணப்பட்ட புதிய நெல்லினமானஏ.ரி. 378 ன் அறுவடை விழாவில் பிரதம அதிதியாக உதவி விவசாய பணிப்பாளர் திருமதி நித்தியா நவரூபன் கலந்து கொண்டார்.

மற்றும் வலயத்தின் விவசாய போதனாசிரியர்கள், தொழில்நுட்ப உதவியாளர்கள், டிப்ளோமா பயிலுனர்கள், விவசாயிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதன் போது புதிய நெல் இனம் சம்பந்தமான விடயங்கள், நெல் இனத்தின் இயல்புகள், விளைச்சல் பற்றியும் விவசாயிகளுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

(அ)

# பல்கலைக்கழகத்துக்கு தெரிவாகிய மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு



அம்பாறை, பெப். 07

மருதமுனை இளங்கலை பட்டதாரிகள் அமைப்பின் புதிய நிர்வாகத்தின் முதல் செயற்திட்டமாக 2022/2023 கல்வியாண்டில் அரச பல்கலைக் கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரியின் மருதூர் கொத்தன் கலையரங்கில் வெகு விமர்சையாக அமைப்பின் தலைவர் ஏ.பைஹான் அஹமட் தலைமையில் இடம் பெற்றது.

இந் நிகழ்வுக்கு அதிதிகளாக இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் கலை மற்றும் கலாசார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எம்.எம். பாஸில், சட்டத்தரணி எம்.ஐ. இயாஸ்தீன், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் உயர்பீட உறுப்பினரும், அபிவிருத்தி உத்தியோகத்தருமான கலீல் முஸ்தபா, டாக்டர் சஸ்லி ஹமீட், பரக்கத் டெக்ஸ் முகாமைத்துவ பணிப்பாளர் எம்.ஐ.ஏ. பரீட் மற்றும் மருதமுனை இளங்கலைப் பட்டதாரிகள் அமைப்பின் ஆலோசனை சபை உறுப்பினர்கள், இளங்கலைப் பட்டதாரிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (அ)

# கல்முனை மாநகரப் பாடசாலைகளுக்கு பாராளுமன்ற உறுப்பினர் ஹரீஸ் விஜயம்

அம்பாறை, பெப். 07

கல்முனை வலயக்கல்வி அலுவலகத்தின் கீழுள்ள கல்முனை பஹ்ரியா மகா வித்தியாலயம், சாய்ந்தமருது எம்.எஸ். காரியப்பர் வித்தியாலயம், நற்பிட்டிமுனை லாபீர் வித்தியாலயம், மருதமுனை - பெரியநீலாவணை அக்பர் வித்தியாலயம், கல்முனை அஸ் ஸுஹரா வித்தியாலயம், கல்முனை அஸ்ஹர் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளுக்கு கடந்த வெள்ளிக்கிழமை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித்தலைவரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான, பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் விஜயம் செய்து பாடசாலைகளின் குறைநிறைகளையும், கல்வி மேம்பாட்டு தேவைகளையும் பாடசாலை நிர்வாகத்திடம் கேட்டறிந்தார்.

இந்த விஜயத்தின் போது மாணவர்களிடம் கல்வி மேம்பாடு தொடர்பிலும், எதிர்கால கல்வி நிலைகள் தொடர்பிலும், பாடசாலை கால ஒழுக்க விடயங்கள் தொடர்பில் மாணவர்கள் மத்தியில் உரை நிகழ்த்தியதுடன் கல்முனை பஹ்ரியா



மகா வித்தியாலயம், சாய்ந்தமருது எம்.எஸ். காரியப்பர் வித்தியாலயம், நற்பிட்டிமுனை லாபீர் வித்தியாலயம், மருதமுனை - பெரியநீலாவணை அக்பர் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு கல்முனை வலயக் கல்வி அலுவலகத்திற்கு கிழக்கு மாகாண சபை ஊடக கிடைக்கப்பெற்ற பாடசாலை புத்தக பைகளையும் வழங்கினார்.

இந்த நிகழ்வில் கல்முனை வலயக்கல்வி பணிப்பாளர் எம்.எஸ். சஹதுல் நஜீம், கிழக்கு மாகாண கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழு உறுப்பினர் யூ.எல்.என். ஹுதா உமர், பாராளுமன்ற உறுப்பினரின் உத்தியோகத்தர்கள், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதேச முக்கியஸ்தர்கள், பாடசாலைகளின் பிரதி அதிபர்கள், உதவி அதிபர்கள், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்று குழு உறுப்பினர்கள், பழைய மாணவர்கள் சங்க பிரதிநிதிகள், விளையாட்டு பயிற்றுவிப்பாளர், மாணவர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

(அ)

# சாய்ந்தமருதில் ஜனாஸா நலன்புரி மக்கள் பேரவையின் புதிய காரியாலயம் திறப்பு

அம்பாறை, பெப். 07

சாய்ந்தமருது ஜனாஸா நலன்புரி மக்கள் பேரவையின் புதிய காரியாலயத் திறப்பு விழா வைத்தியசாலை தெற்கு வீதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

சாய்ந்தமருத்துக்கான ஜனாஸா நலன்புரி காரியாலயம் தேவையாக இருந்தபோது சாய்ந்தமருது பிரதேச செயலாளர் மற்றும் ஜனாஸா நலன்புரி அமைப்பினர் சாய்ந்தமருது வைத்தியசாலை தெற்கு வீதியில் அமைந்திருந்த ஒரு பழைய கட்டடத்தை முன்னாள் உயர் கல்வி பிரதியமைச்சர் மர்ஹூம்



மயோன் முஸ்தபாவின் நினைவாக புனர்நிர்மாணம் செய்து அதனை மக்களின் தேவைக்காக திறந்து வைக்கப்பட்டு, சாய்ந்தமருது பிரதேச செயலாளரினால் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்பட்டது.

(அ)

# புதிய அதிபராக கடமையேற்பு!



மட்டக்களப்பு, பெப். 07

இலங்கை அதிபர் சேவை தரம் III இற்கான நியமனத்தைப் பெற்ற திருமதி.ஸோபா ஜெயரஞ்சித் வாழைச்சேனை இந்துக் கல்லூரி தேசிய பாடசாலையின் புதிய அதிபராக தனது கடமையை பொறுப்பேற்றுக்கொண்டார்.

குறித்த அதிபரின் தாய்ப் பாடசாலையாக இருக்கும் இப்பாடசாலையில் தனது ஆரம்பக் கல்வி முதல் உயர்தரம் வரை கற்று சிறந்த பெறுபேறு பெற்று ஆசிரியர் சேவையில் 2001-2008 வரை கடமையாற்றியதுடன் இப்பாடசாலைக்கு அதிபர் சேவையின் முதல் நியமனமும் கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

ஈழநாடு



# சார்ள்ஸுக்கு புற்றுநோய்!

## அரண்மனை அறிவிப்பு; சிகிச்சைகள் ஆரம்பம்

லண்டன், பெப். 07

**இங்கிலாந்து மன்னர் சார்ள்ஸுக்குப் புற்றுநோய் ஏற்பட்டுள்ளது. அதற்கான சிகிச்சைகள் தொடங்கியுள்ளன என்று பக்கிங்காம் அரண்மனை இன்று மாலை அறிவித்திருக்கிறது.**

மன்னர் சில தினங்களுக்கு முன்னர் புரோஸ்டேட் சுரப்பி வீக்கத்துக்காகச் சிகிச்சை பெற்ற சமயத்திலேயே அவருக்குப் புற்றுநோய் ஏற்பட்டிருப்பது கண்டறியப்பட்டுள்ளதாகவும் அரண்மனை கூறியுள்ளது. ஆயினும் அவருக்கு எவ்வகையான புற்றுநோய் ஏற்பட்டுள்ளது என்பது பற்றிய விவரம் எதுவும் வெளியிடப்படவில்லை.

75 வயதுடைய மன்னர் பொதுக் கடமைகளை ஒத்தி வைக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளார். ஆயினும் அரச கடமைகளை அவர் மேற்கொள்வார் என்று அறிவிக்கப்படுகிறது.

மன்னருக்குப் புற்று நோய் புரோஸ்டேட் சுரப்பியில் ஏற்படவில்லை என்று அரண்மனை விடுத்த அறிக்கை தெரிவித்துள்ளது. சுரப்பி வீக்கத்தை அடுத்துச் சிகிச்சைக்காக அவர் ஒரு வார காலம் லண்டன் தனியார் கிளினிக் மருத்துவமனையில் தங்கிச் சிகிச்சை பெற்றிருந்தார். அந்தச் சிகிச்சைகளின் போதே "பிறிதொரு கவலைக்குரிய புற்றுநோயின் தோற்றம்" அடையாளம் கண்டறியப்பட்டது என்று அரண்மனை அறிக்கை தெரிவித்தது.

மன்னருக்குப் புற்றுநோய் பாதித்த அதிர்ச்சிச் செய்தி இங்கிலாந்து எங்கும் மக்களது கவனத்தை ஈர்த்துள்ளது. உலக செய்தி நிறுவனங்கள் அதனை விசேட நேரலைச் செய்தியாக வெளியிட்டுவருகின்றன.

நாட்டு மக்கள் அனைவரும் மன்னர் விரைவாக நலம் பெற வேண்டி நிற்கின்றனர் என்று பிரதமர் ரிஷி சுனாக் தனது செய்தி ஒன்றில் தெரிவித்திருக்கிறார். அரசியல் தலைவர்கள் பலரும் மன்னர் குணமடைய வேண்டும் என்று கேட்டு செய்திகளை வெளியிட்டுள்ளனர்.

"நம்பமுடியாத துயரச்செய்தி" இது என்று வோஷிங்டனில்



அமெரிக்க ராஜதந்திரி ஒருவர் கவலை வெளியிட்டிருக்கிறார்.

அமெரிக்காவில் தங்கியுள்ள இளவரசர் ஹறி தந்தையாரான மன்னருடன் தொலைபேசியில் பேசியபிறகு அவரைச் சந்திப்பதற்காக இங்கிலாந்து திரும்புகிறார் என்று செய்திகள் தெரிவித்தன.

மன்னர் சார்ள்ஸ் சிகிச்சை பெற்ற அதே லண்டன் மருத்துவமனையிலேயே வேல்ஸ் இளவரசி கேற்றுக்கும் அடிவயிற்றில் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டிருந்தது. சிகிச்சையின் பின்னர் இளவரசி அரண்மனை திரும்பியுள்ளார்.

(அ)

# அமெரிக்க ஜனாதிபதி தேர்தல்

## 38 வீதமானோரே பைடன் மீண்டும் தெரிவு செய்யப்படுவதற்கு ஆதரவு!

நியூயோர்க், பெப். 07

அமெரிக்காவில் எதிர்வரும் நவம்பர் மாதம் ஜனாதிபதி தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், அந்த தேர்தல் குறித்து பல நிறுவனங்கள் கருத்துக்கணிப்புகளை நடத்தி வருகின்றன.

கேலப் என்ற நிறுவனம் அண்மையில் நடத்திய கருத்துக்கணிப்பின் பரபரப்பு முடிவுகள் வெளியாகியுள்ளன. தற்போதைய ஜனாதிபதி ஜோ பைடன் மீண்டும் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட வேண்டும் என்பதை 38 வீதம் பேர் மட்டுமே ஏற்றுக்கொண்டுள்ளது இந்த கருத்துக்கணிப்பில் தெரியவந்துள்ளது.

அதேவேளை, 50 சதவீத அமெரிக்கர்கள் முன்னாள் ஜனாதிபதி டொனாலட் டிரம்ப் மீண்டும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதை ஆதரித்துள்ளனர்.

ஜோ பைடனின் முதுமை காரணமாக அவர் இரண்டாவது முறையாக ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படுவதை பலர் விரும்பவில்லை.



அவரது வயது, மெக்சிகோவுடனான எல்லை பிரச்சினை மற்றும் நாட்டில் ஏற்பட்டுள்ள பணவீக்கம் போன்ற விடயங்கள் பைடனுக்கு எதிரான காரணிகளாக உள்ளன.

சிலர் டொனால்ட் ட்ரம்ப் வயதை சுட்டிக்காட்டி எதிர்ப்பை வெளியிட்டாலும் பைடனுடன் ஒப்பிடும் போது அவரது வயது குறைவு எனக்கூறியுள்ளனர்.

எது எப்படி இருந்த போதிலும் கேலப் என்ற நிறுவனம் இதற்கு முன்னரும் இவ்வாறான கருத்துக்கணிப்புகளை நடத்தியுள்ளது. எனினும் முடிவுகள் அதற்கு எதிர்மாறாக இருந்தது.

(அ)

# நியூசிலாந்தில் இந்திய மாணவர் கொலை செய்யப்பட்டுள்ளார்!

வெலிங்டன், பெப். 07

அமெரிக்காவில் அண்மையில் அடுத்தடுத்து 4 இந்திய மாணவர்கள் உயிரிழந்த நிலையில், நியூசிலாந்தில் இந்திய மாணவர் ஒருவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பான செய்தி வெளியாகியுள்ளது.

நியூசிலாந்தில் கல்வி கற்று வந்த பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்த 28 வயதான குர்ஜித் சிங் என்ற மாணவர் சந்தேகத்திற்கிடமான முறையில் உயிரிழந்தார்.

குர்ஜித்தின் தந்தை நிஷான் சிங் தனது விவசாய நிலத்தை விற்று அவரை நியூசிலாந்துக்கு அனுப்பினார். நியூசிலாந்தில் டெலிகாம் நிறுவனத்தில் பகுதி நேரமாக பணிபுரிந்த குர்ஜித் சிங், டுனெடின் நகரில் வசித்து வந்துள்ளார்.

இந்த நிலையில், அவர் தனது வீட்டில் வைத்து இனந்தெரியாத நபரால் கொலை செய்யப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

கூரிய ஆயுதத்தால் பலமுறை குத்தியதால் அவர் உயிரிழந்துள்ளதாக அவரது உடலை பிரேதப் பரிசோதனை செய்த அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தனது மகன் கொலை செய்யப்பட்ட தகவல் கிடைத்த பின்னர், குர்ஜித் சிங்கின் தந்தை



நிஷான் சிங் நேற்று நியூலாந்தின் டுனெடின் நகருக்கு சென்றுள்ளார்.

தனது மகனின் மரணத்திற்கு காரணமானவர்கள் தண்டிக்கப்படும் வரை திருப்தியடைய போவதில்லை என அவர் கூறியுள்ளார்.

இந்த நிலையில் பொலிஸார் நடத்திய விசாரணைகளை அடுத்த சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

எனினும் கொலை தொடர்பாக நியூசிலாந்து பொலிஸார் பல கோணங்களில் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

(அ)

# பிரான்ஸில் உயரும் எரிவாயு கட்டணம்!

## பாவனை குறைவடையும் சாத்தியம்

பாரிஸ், பெப். 07

பிரான்ஸில் உள்ள குடும்பங்கள் எதிர்வரும் ஜூலை மாதத்தில் எரிவாயு கட்டண அதிகரிப்பை எதிர்கொள்ள வேண்டிவரும் என அந்த நாட்டு எரிசக்தி ஒழுங்குமுறை ஆணையகம் தெரிவித்துள்ளது.

இதன்படி, எரிவாயு கட்டணம் 5.5 முதல் 10.4 வீதம் அதிகரிக்கும் என எரிசக்தி ஒழுங்குமுறை ஆணையகம் அறிவித்துள்ளது.

இதற்கமைய, 5.5 வீத அதிகரிப்பு என்பது தமது வீட்டை சூடு படுத்துவதற்காக எரிவாயுவை பயன்படுத்தும் சராசரி பாவனையாளருக்கு மாதமொன்றுக்கு 7.30 யூரோ மேலதிக செலவாக மதிப்பிடப்படுகிறது. இந்த தொகையானது வருடத்திற்கு 87.60 யூரோ கட்டண அதிகரிப்பாகும்.

வெந்நீர் மற்றும் சமையலுக்கு மாத்திரம் எரிவாயுவை பயன்படுத்துபவர்களுக்கு, எரிவாயு கட்டணமானது 10.4 வீதம் அதிகரிக்கும் நிலையில், மாதம் 2.20 யூரோ மேலதிகமாக செலுத்த வேண்டிய நிலை ஏற்படும். இந்த தொகையானது வருடத்திற்கு 26.40 யூரோ அதி



கரிப்பாகும்.

இருப்பினும், இந்த கட்டண அதிகரிப்பானது எரிவாயு பயன்பாட்டை குறைப்பதற்கான சாத்தியத்தினை கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

2024 ஆம் ஆண்டில் எரிவாயு கட்டணம் அதிகரிக்கும் என மக்கள் அச்சமடைகின்ற போதிலும், அண்மைக்காலமாக சர்வதேச சந்தையில் எரிவாயுவின் ஒரு அலகுக்கான விலை வீழ்ச்சியடைந்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த விலை வீழ்ச்சிக்கும் எரிவாயு பாவனை குறைவடைந்தமைக்கும் பாரிய தொடர்புள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. எனவே, எரிவாயுவை குறைவாக பயன்படுத்துவதால் பராமரிப்பு செலவு குறைந்த பாவனையாளர்களிடையே பகிரப்படுவதாக குறிப்பிடப்படுகிறது.

இதேநேரம், மின்சார கட்டணமும் இம்மாதம் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

67.75 மில்லியன் மக்கள் தொகையை கொண்ட பிரான்ஸில் 125,000 தமிழர்கள் வாழ்கின்றனர். இந்த நிலையில், குறித்த கட்டண அதிகரிப்பு இவர்களையும் பாதிப்புக்குள்ளாக்கும்.

(அ)

# தென்கொரியா-சவுதி இடையே விரைவில் பாதுகாப்பு புரிந்துணர்வு உடன்படிக்கை!

## ஆயுத விற்பனையை அதிகரிக்கவும் திட்டம்

ரியாத், பெப். 07

நாட்டின் பாதுகாப்பை பலப்படுத்தும் நோக்கில் சவுதி அரேபியா தென்கொரியாவுடன் நேற்று பாதுகாப்பு சம்பந்தமான புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளது. இந்த புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு அமைய தென் கொரியா, சவுதிக்கான தனது ஆயுத விற்பனையை அதிகரிக்கலாம்.

அத்துடன் புரிந்துணர்வு உடன்டிக்கைக்கு அமைய ஆயுதங்கள் தொடர்பான ஆராய்ச்சி, அபிவிருத்தி, தயாரிப்பு உள்ளிட்ட விடயங்களிலும் இரு நாடுகளும் ஈடுபட முடியும்.

இந்த உடன்படிக்கை இரண்டு நாடுகளின் பாதுகாப்பு அமைச்சர்கள் முன்னிலையில் கைச்சாத்திடப்பட்டன. எனினும் உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் வெளியிடப்படவில்லை.

வெளிநாடுகளுக்கு ஆயுதங்களை விற்பனை செய்ய பல நாடுகள் ஒன்றுடன் ஒன்று போட்டியிட்டு வரும் நிலையில், தென் கொரியாவும் ஆயுத விற்பனையில் முக்கியமான நாடாக மாற முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

கடந்த 2022 ஆம் ஆண்டில் மாத்திரம் தென்கொரியா 17 பில்லியன் டொலர் பெறுமதியான ஆயுதங்களை வெளிநாடுகளுக்கு விற்பனை செய்துள்ளது. மேலும் தென் கொரிய கடந்த ஒரு தசாப்த காலத்தில் மத்திய கிழக்கு நாடுகளுக்கான தனது ஆயுத விற்பனையை 10 மடங்காக அதிகரித்துள்ளது.

(அ)

# சிறைச்சாலை வைத்தியசாலையில் சிங்கப்பூர் மருந்து கேட்கும் கெஹலிய

## அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தகவல்

கொழும்பு, பெப். 07

**சிறைச்சாலை வைத்தியசாலையில் சிகிச்சைபெறுகின்றார் எனக் கூறப்படும் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல, சிங்கபூரில் இருந்து தனிப்பட்ட ரீதியில் வாங்கிய மருந்தே தனக்கு வேண்டும் என கோருகிறார் எனவும், அவரால் மக்களுக்கு இறக்குமதி செய்யப்பட்ட மருந்தை நிராகரிக்கின்றார் எனவும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத் தலைவரும், விசேட வைத்திய நிபுணருமான ருக் ஷான் பெல்லன தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

தான் இறக்குமதி செய்த மருந்து வேண்டாம் என அதனை கெஹலிய ரம்புக்வெல்ல நிராகரித்துள்ளார் எனவும், சிங்கப்பூரில் இருந்து தனிப்பட்ட ரீதியில் தனக்கு வாங்கப்பட்ட மருந்தே வேண்டும் என அவர் கோருகின்றார் என தெரியவருகின்றது.

அதேபோல சிறைச்சாலை வைத்தியசாலையில் இருக்க முடியாது, தனியார் வைத்திய சாலைக்கு மாற்றுமாறு கோருகிறார் எனவும் அறியக்கிடைத்துள்ளது. இந்த கோரிக்கையை நிறைவேற்றும் அதிகாரிகள் நிச்சயம் கைது செய்யப்பட வேண்டும்.

சிறை அறைக்குள் போட்ட பின்னர் அங்கு சுகயீனம் ஏற்பட்டால் சிறைச்சாலை வைத்திய சாலைக்கு கொண்டு செல்லும் நடைமுறையே உள்ளது. ஆனால் சிறை அறைக்குள் போடாமல் கெஹலிய வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார். இது தொடர்பிலும் நடவடிக்கை அவசியம்-என்றார். (அ)

# மோட்டார் சைக்கிளை திருடிய 13 வயதுடைய மாணவன் கைது!

கொழும்பு, பெப். 07

கண்டி-பொக்காவல பொலிஸ் பிரிவில் பாடசாலையொன்றில் கல்வி பயிலும் 13 வயதுடைய மாணவன் மோட்டார் சைக்கிளை திருடியதாக பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட மாணவன் பூஜாபிட்டிய மரத்துகொட பிரதேசத்தைச் சேர்ந்தவர் எனவும், அவர் பிரிவெனா பாடசாலையொன்றில் கல்வி பயின்று வருவதாகவும் பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரியவருகிறது.

பொக்காவல பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து, அவரது வீட்டில் மறைத்து வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் பொலிஸாரால் கண்டுபிடிக்கப் பட்டுள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.

பொக்காவல திகல்ல பிரதேசத்தில் நபர் ஒருவருக்கு சொந்தமான மோட்டார் சைக்கிள் வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நிலையில் எடுத்துச் செல்லப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

பொக்காவல பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜானக சஞ்சீவவுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் அப்பகுதியில் உள்ள சிசிரிவி கமெராக்களை சோதனை செய்த பொலிஸார் சந்தேகத்திற்குரிய மாணவனை அடையாளம் கண்டுள்ளனர்.

குறித்த மாணவனின் வீட்டுக்கு அருகில் மோட்டார் சைக்கிள் நிறுத்தப்பட்டிருந்ததாகவும், அது அவரது பெற்றோருக்கோ அல்லது அவரது குடும்பத்தினருக்கோ தெரியாது எனவும் பொலிஸார் கூறினர். (அ)

# 76 கோடி ரூபாய் மோசடி; இலங்கை வர்த்தகர் கைது!

கொழும்பு, பெப். 07

நாட்டில் சுமார் 76 கோடி ரூபா மோசடியில் ஈடுபட்டுள்ளதாக சந்தேகிக்கப்படும் இலங்கை வர்த்தகர் ஒருவர் மாலைதீவில் கைது செய்யப்பட்டுள்ளதாக குற்றப் புலனாய்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

குறித்த நபர் கோடிக்கணக்கான பெறுமதியுடைய மாணிக்கக் கற்களை மோசடி செய்துள்ளதாகவும் இதன் பின்னர், நாட்டை விட்டுத் தப்பிச் சென்றதாகவும் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

குறித்த வர்த்தகரை குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் விசேட குழுவொன்று மாலைதீவில் கைது செய்துள்ளது.

அவருக்கு எதிராக சிவப்பு பிடியாணை பிறப்பிக்கப்பட்ட நிலையிலேயே தற்போது கைது செய்யப்பட்டுள்ளார்.

தற்போது சந்தேக நபர், நாட்டு அழைத்து வரப்பட்டுள்ள நிலையில், விசாரணைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுவதாக பொலிஸார் குறிப்பிட்டனர். (அ)

# சிறையிலுள்ள சந்தேகநபர்களை ஒன்லைன் மூலம் நீதித்துறை நடவடிக்கைகளுக்கு அனுப்பத் திட்டம்!

கொழும்பு, பெப். 07

சிறைச்சாலையில் உள்ள சந்தேக நபர்களை ஒன்லைன் முறையின் மூலம் நீதித்துறை நடவடிக்கைகளுக்கு அனுப்புவதற்கான சட்டத் திருத்தத்தை நீதி அமைச்சு மேற்கொண்டு வருகிறது என சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் துஷார உபுல்தெனிய தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகளின் குற்றத்தடுப்பு அலுவலகத்தின் அனுசரணையுடன் தென் மாகாணத்தில் இந்த வேலைத்திட்டம் சம்பிரதாயபூர்வமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாகவும், நாடளாவிய ரீதியில் இதனை நடைமுறைப்படுத்துவதில் கவனம் செலுத்தி, உரிய சட்ட திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் கூறினார்.

பல்லேகல திறந்தவெளி சிறைச்சாலை முகாமில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே உபுல்தெனிய மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கொவிட் தொற்றுநோய்க்கு கைதிகள் பலியாவது உட்பட பல காரணிகளால், கொவிட் காலத்தில் சிறையில் உள்ள சந்தேக நபர்களை ஒன்லைன் அமைப்பின் மூலம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியதுடன், அதன் நேர்மறையான அம்சங்களை மையமாகக் கொண்டு, புதிய திட்டம் ஆரம்பிக்கப்படும்.

நீதிமன்ற நீதிபதிகள் ஒப்புக் கொள்ளும் வழக்குகளில், தற்போது 'ஸூம்' தொழில்நுட்பம் மூலம் கைதிகளின் விசாரணை திகதியினை நீட்டிப்பது போன்ற விஷயங்களைச் செய்து வருகின்றனர். இதன் மூலம் கடுமையான குற்றவாளிகளை நீதிமன்றத்திற்கு அழைத்துச் செல்வதில் ஏற்படும் சிக்கல்களை குறைக்க முடியும்-என்றார். (அ)

# கெஹலியவுக்கு வீட்டில் இருந்து உணவு எடுத்துச் செல்ல அனுமதி

கொழும்பு, பெப். 07

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவுக்கு வீட்டில் இருந்து உணவு எடுத்துச் செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

வைத்தியர்களின் பரிந்துரைக்கமைய இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அமைச்சர் எழுத்துமூலம் கோரிக்கை விடுத்ததாக சிறைச்சாலைகள் ஊடகப்பேச்சாளர் காமினி பி. திசாநாயக்க தெரிவித்தார்.

இதேவேளை, தற்போது சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெறுவதற்கு கோரிக்கை விடுக்கவில்லை என சிறைச்சாலை திணைக்களம் தெரிவித்துள்ளது.

சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளரும் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகமுமாகிய காமினி பி.திசாநாயக்கவிடம் வினவிய போதே இதனை குறிப்பிட்டார்.

இமியூனோகுளோபியூலின் மருந்து கொடுக்கல் - வாங்கல் தொடர்பில், அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல கடந்த வெள்ளிக்கிழமை விளக்கமறியலில் வைக்கப்பட்டார். (அ)

# கஞ்சா செடியை பயிரிட அமைச்சரவை அனுமதி

கொழும்பு, பெப். 07

ஏற்றுமதி நோக்கத்திற்காக கஞ்சாச்செடியை பயிரிடுவதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்துள்ளதாக சுற்றுலாத்துறை இராஜாங்க அமைச்சர் டயனா கமகே தெரிவித்தார்.

இராஜாங்க அமைச்சர் டயனா கமகேயினால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



இவ்வாறு அங்கீகாரம் கிடைத்துள்ளமை தனக்கு மிகவும் மகிழ்ச்சியைத் தருவதாக அவர் இராஜாங்க அமைச்சர் டயனா கமகே குறிப்பிட்டார். (அ)

# உந்துருளி மோதியதில் இரண்டு பேர் உயிரிழப்பு

## 9 மாத குழந்தை வைத்தியசாலையில் அனுமதி

கொழும்பு, பெப். 07

தம்புள்ளை - கண்டி பிரதான வீதியில் இடம்பெற்ற விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

வீதியின் அருகே நின்று கொண்டிருந்த போது வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் ஒன்று அவர்கள் மீது மோதியுள்ளது.

விபத்தில் காயமடைந்த 9 மாத குழந்தை தம்புள்ளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கண்டி தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது மோட்டார் சைக்கிளில் பயணித்தவரும் பலத்த காயங்களுக்கு உள்ளாகி தம்புள்ளை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

சம்பவத்தில் பண்டாரகம பிரதேசத்தை சேர்ந்த இருவரே உயிரிழந்துள்ளனர். (அ)

# விசேட சோதனையில் 733 பேர் கைது!

கொழும்பு, பெப். 07

நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் விசேட சோதனை நடவடிக்கையின் கீழ், நேற்று அதிகாலை 12.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணிநேரத்தில் 733 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களில் போதைப்பொருள் குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடைய 589 பேரும், குற்றப்பிரிவுக்கு அனுப்பப்பட்டுள்ள பட்டியலில் உள்ள 144 பேரும் அடங்குவதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

கைதானவர்களில் 4 பேர் புனர்வாழ்வு மையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

அதேநேரம் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பணியகம் மற்றும் காவல்துறை விசேட பணியகத்தினால் தேடப்படும் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ள 8 சந்தேகநபர்களும்கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த சுற்றிவளைப்புகளின் போது 130 கிராம் ஹெரோயின், கஞ்சா மற்றும் ஐஸ் உள்ளிட்ட பல்வேறு வகையான போதைப் பொருட்கள் மீட்கப்பட்டுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

# உள்நாட்டுத் துப்பாக்கி இயங்கியதால் ஒருவர் பலி!

முல்லைத்தீவு, பெப். 07

மாங்குளம் - மணவாளன் பட்டமுறிப்பு பகுதியில் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி இயங்கியதால் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மணவாளன் பட்டமுறிப்பு பகுதியைச் சேர்ந்த 69 வயதான ஒருவரே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தேன் சேகரிப்பதற்காக தனது செல்லப்பிராணியுடன் குறித்த நபர் காட்டுக்கு சென்றிருந்த சந்தர்ப்பத்தில் இந்த அனர்த்தம் சம்பவித்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (அ)

## தென்னிந்திய...

நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில், தென்னிந்திய திரை பிரபலங்களான நடிகை தமன்னா , ஐஸ்வர்யா ராஜேஷ், யோகி பாபு , சாண்டி மாஸ்டர், புகழ் , பாலா உள்ளிட்ட பல கலைஞர்கள் கலந்து கொள்ளவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இந்த...

திட்டத்தில் தேர்தலுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 10 பில்லியன் ரூபாவில் முகாமைத்துவம் செய்ய வேண்டியுள்ளமை தொடர்பில் அமைச்சரவை கவனம் செலுத்தியுள்ளது.

ஜனாதிபதியினால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்தின் அடிப்படையில் அமைச்சரவை இந்த விடயத்துக்கு இணங்கியுள்ளது.

அரசாங்கத்திடம் காணப்படும் வரையறுக்கப்பட்ட நிதி நிலைமையினால், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்ற தேர்தல்களை நடத்துவதற்கு தேவையான நிதியை 2025 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தினூடாக வழங்க வேண்டியுள்ளமை தொடர்பிலும் அமைச்சரவை ஆராய்ந்துள்ளது.

எவ்வாறாயினும், அந்த 2 தேர்தல்களையும் நடத்துவதற்கு முன்னதாக விசாரணை ஆணைக் குழுவினால் சமர்ப்பிக்கப்படவுள்ள பரிந்துரைகளுக்கு அமைய தேவைப்படும் பட்சத்தில் தொடர்புடைய தேர்தல் சட்டங்களை மறுசீரமைப்பதற்கான திருத்தங்களை பாராளுமன்ற அனுமதியின் அடிப்படையில் அறிமுகம் செய்ய வேண்டுமெனவும் அமைச்சரவை கலந்தாலோசித்துள்ளது. (அ)

## பதவி...

மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதுடன், அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

ஊழல் - மோசடி குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ள கெஹலிய ரம்புக்வெலவை அமைச்சரவையில் தொடர்ந்து வைத்திருப்பதற்கு அரசாங்கத்தின் முக்கிய அமைச்சர்கள் சிலர் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தியதுடன், கெஹலியவை உடனடியாக பதவி நீக்க வேண்டும் என எதிர்க்கட்சிகளும் அழுத்தம் கொடுத்தன.

இந்த நிலையிலேயே தமது இராஜினாமா கடிதத்தை கெஹலிய ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்துள்ளதாக அரச தரப்பு செய்திகள் தெரிவித்தன.

இதேவேளை, கெஹலியவின் பதவி விலகலை உறுதிப்படுத்தும் விதமாக வர்த்தமானியும் நேற்று வெளியிடப்பட்டிருந்தது. (அ)

## உயர்நீதிமன்ற...

நடவடிக்கை சட்டமா அதிபர் திணைக்களம், சட்டவரைவாளர் திணைக்களம் ஆகியவற்றுடன் இணைந்து முன்னெடுக்கப்படுவதால் உயர்நீதிமன்றத்தின் தீர்மானத்துக்கு மாறாக அல்லது அரசமைப்புக்கு முரணாக செயல்படும் வாய்ப்புகள் இல்லை.

உச்சநீதிமன்றத்தின் எவ்வாறான பரிந்துரைகள் புறக்கணிக்கப்பட்டன என்பதை சம்பந்தப்பட்ட உறுப்பினர்கள் தெரிவித்தால் உரிய அதிகாரிகள் அதற்கு பதிலளிப்பார்கள். மேற்குறிப்பிட்ட விடயங்களில் சபாநாயகருக்கு விருப்புரிமை இல்லை.

பாராளுமன்றத்தின் செயல்முறையை நன்கு புரிந்து கொள்ளவேண்டியவர்கள் வேறுவிதமாக தெரிவிப்பது கவலையளிக்கின்றது. சபாநாயகர் தனது விருப்பத்தின்படி சட்டங்களை இயற்றலாம் சட்டமூலங்களில் திருத்தங்களை செய்யலாம் என்று தெரிவிப்பது அவர்களின் (குறிப்பிட்ட பாராளுமன்ற உறுப்பினர்களின்) சட்ட அரசமைப்பு குறித்த அறிவை அவமதிக்கின்றது - என்றும் அதில் கூறப்பட்டுள்ளது. (ஐ)

## பொதுச்...

பொதுச் செயலர் பதவியை வழங்குவது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனினும், பொதுச் செயலாளர் பதவியை முதல் வருடத்தில் வகிப்பது யார் என்பதில் இழுபறி நீடிக்கிறது. இதற்கும் விரைவாகத் தீர்வு காணப்படும்பட்சத்தில் எதிர்வரும் 11ஆம் திகதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்ட மத்திய செயல்குழு கூட்டம் நடைபெறாது. விரைவாகவே தேசிய மாநாட்டை நடத்தி பதவியேற்பு நிகழ்வை நடத்த கட்சியின் புதிய தலைமை சிந்தித்து வருவதாகவும் கூறப்பட்டது.

முன்னதாக, தமிழ் அரசு கட்சியின் பொதுச் செயலாளரை தெரிவு செய்வதற்காக கடந்த மாதம் 27ஆம் திகதி மத்திய செயல்குழு கூடியது. பல வாதப் பிரதிவாதங்களுக்கு பின்னர் கட்சியின் திருகோணமலை மாவட்ட கிளையின் தலைவர் குகதாசன் பொதுச் செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டார். இதைத் தொடர்ந்து புதிய நிர்வாகமும் தெரிவு செய்யப்பட்டது. பொதுக்குழுவிலும் குகதாசன் 12 மேலதிக வாக்குகளால் பொதுச் செயலாளராக அங்கீகரிக்கப்பட்டார். எனினும், தெரிவின்போது முறைகேடுகள் நடந்தன என்று சர்ச்சைகள் எழுந்த நிலையில் கடந்த மாதம் 28ஆம் திகதி நடைபெறவிருந்த தமிழ் அரசு கட்சியின் தேசிய மாநாடு ஒத்திவைக்கப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## யுக்திய...

கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதில், போதைப்பொருள் குற்றங்களுக்காக கைது செய்யப்பட்ட 49 ஆயிரத்து 558 சந்தேகநபர்களில் ஆயிரத்து 817 பேர் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்படுகின்றனர். ஆயிரத்து 981 பேர் போதைக்கு அடிமையானவர்கள் என்று அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்கள் புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை, சட்டவிரோத சொத்துகள் தொடர்பில் 234 பேர் விசாரிக்கப்படுகின்றனர். மேலும் விசேட பணியகத்தின் பட்டியலில் இருந்த சந்தேகநபர்கள் 3 ஆயிரத்து 83 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேசமயம், 773 கோடியே 30 இலட்சம் ரூபாய் பெறுமதியான போதைப் பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. பறிமுதல் செய்யப்பட்ட சொத்துகளின் மதிப்பு 72 கோடியே 60 இலட்சம் ரூபாய் என்றும் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (ஐ)

## ஒக்ரோபர்...

தேர்தல் கூட்டணிகளை அமைக்கும் பணிகளில் பிரதான மற்றும் சிறியக் கட்சிகள் பேச்சுவார்த்தைகளை நடத்தி வரும் பின்புலத்தில், தேர்தல் ஒக்ரோபர் மாதம் 14ஆம் திகதி நடைபெறும் என அரசாங்கத்தின் முக்கிய அமைச்சர்களில் ஒருவரான ஹரின் பெர்ணான்டோ கூறியுள்ளார்.

“தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி தேர்தலில் நிச்சயமாக போட்டியிடுவார். அதனை அவரே அறிவிப்பார். ஒக்ரோபர் 14ஆம் திகதிக்கு முன்னர் புதிய ஜனாதிபதி பொறுப்பேற்கவேண்டும்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு 3 வீத வாக்குகளைப் பெற்றவர்கள் அதற்கு மேலதிகமாக 47 வீத வாக்குகளை பெற்றுக்கொள்வது என்பது வெறும் கனவாக மட்டுமே இருக்கும்.

நாட்டை கட்டியெழுப்ப தற்போதைய ஜனாதிபதிக்கு மேலும் ஒரு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும். அவர் குறுகிய காலத்தில் வங்குரோத்து நிலையில் இருந்த நாட்டை மாற்றியுள்ளார்.” எனவும் ஹரின் பெர்ணான்டோ தெரிவித்தார். (அ)

# கெஹலிய பாராளுமன்ற அமர்வில் பங்கேற்க அனுமதி!

கொழும்பு, பெப். 07



பாராளுமன்றத்தின் புதிய அமர்வு இன்று புதன்கிழமை ஆரம்பமாகிறது. இதில் பங்குபற்றுவதற்கு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர் கெஹலிய ரம்புக்வெலவுக்கு சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன அனுமதி வழங்கியுள்ளார்.

ரம்புக்வெலவை பாராளுமன்றக் கூட்டங்களில் பங்கேற்க அனுமதிக்குமாறு அவரின் செயலாளர் விடுத்த கோரிக்கையையடுத்தே சபாநாயகர் இந்த அனுமதியை வழங்கியுள்ளார்.

இதன்படி, கெஹலிய ரம்புக்வெலவை பாராளுமன்றத்துக்கு அழைத்து வருமாறு சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்துக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

## பூநகரியில்...

தெரிவிக்கப்பட்டது.

இதன்படி, பூநகரி, ஜெயபுரம் பகுதியில் மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்தின் கட்டுப்பாட்டிலுள்ள சுமார் 472 ஏக்கர் காணிகள் அந்தப் பிரதேசங்களைச் சேர்ந்த காணிகளற்ற மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்படவுள்ளது.

அதுமாத்திரமன்றி, காணிகளைப் பெற்றுக் கொள்வோர் மரமுந்திரிகை செய்கையில் ஈடுபடுவதற்கான ஒத்துழைப்புகளை மரமுந்திரிகை கூட்டுத்தாபனம் வழங்குவதுடன், அந்த விளைச்சலை நியாயமான விலைக்கு கொள்வனவு செய்வதற்கும் தீர்மானித்துள்ளது.

இந்த நடவடிக்கை மூலம் பூநகரி, ஜெயபுரத்தை சேர்ந்த சுமார் 100 குடும்பங்கள் நேரடியாக பொருளாதார நன்மைகளை பெற்றுக் கொள்ளவுள்ளன. (ஐ)

## ஜே.வி.பி...

சம்பூர் மின்சார திட்டம் கைவிடப்பட்டமை இதற்கான ஓர் உதாரணம். ஆனால், ஜே. வி. பி. தற்போது வேறு கொள்கையை பின்பற்றுகின்றது இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்கின்றது இது சிறந்த விடயம்

இந்திய பயணத்தின் பின்னர் இலங்கைக்குள் முதலீட்டாளர்கள் வருவதற்கு ஜே. வி. பி. ஆதரவளிக்கும் - என்றும் அவர் கூறினார். (ஐ)

## தேர்தலை...

ஏப்ரல் முதல் வாரத்தில் இந்த கூட்டணி ஆட்சி அமையும் என்றும் அமைக்கப்படும் கூட்டணி அரசாங்கம் இரண்டு வருடங்கள் செயற்படும் என்றும் அதனால் தேர்தலை இரண்டு வருடங்கள் ஒத்திவைக்கப்பது குறித்தும் ஆலோசிக்கப்பட்டுள்ளது.

இவ்வருடம் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் என எதிர்க்கட்சிகள் எதிர்பார்த்தாலும், இத்தருணத்தில் தேர்தலை நடத்தக்கூடாது என அரசுக்கு ஆதரவான கட்சிகள் ஆலோசனைகளை வழங்கியுள்ளதாகவும் தெரிய வருகிறது.

## பாராளுமன்றம்...

ரணில் விக்கிரமசிங்க இன்று முற்பகல் 10.30 மணிக்கு பாராளுமன்றத்தில் கொள்கை பிரகடன உரையை ஆற்றுவார்.

ஜனாதிபதி பாராளுமன்றத்துக்கு வருகைதரும் நிகழ்வை எளிமையாக நடத்துமாறு அவர் வழங்கிய ஆலோசனைக்கு அமைய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதற்கமைய மரியாதை வேட்டுகள் தீர்த்தல் மற்றும் வாகனத் தொடரணி என்பன இடம்பெறாது என்றும் பாராளுமன்ற படைக்கல சேவிதர் குஷான் ஜயரத்ன தெரிவித்தார்.

விருந்தினர்கள் காலை 9. 45 மணிக்குள் தங்கள் இருக்கைகளில் அமரக் கேட்கப்பட்டுள்ளது. சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன மற்றும் அவரின் பாரியாரின் வருகையைத் தொடர்ந்து, பிரதமர் தினேஷ் குணவர்த்தனவின் வருகையும் அதனைத் தொடர்ந்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் முதல் பெண்மணியின் வருகையும் நடைபெறும்.

சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன மற்றும் பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர பாராளுமன்ற கட்டடத்தின் பிரதான நுழைவாயிலின் படிக்கட்டுக்கு அருகில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை வரவேற்பர். அதனைத் தொடர்ந்து, படைக்கல சேவிதர், பிரதி படைக்கல சேவிதர் ஆகியோர் முன்செல்ல சபாநாயகர், பாராளுமன்ற செயலாளர் நாயகம் ஆகியோரால் ஜனாதிபதி பாராளுமன்ற கட்டடத்துக்குள் அழைத்து செல்லப்படுவார்.

பாராளுமன்றத்தின் பிரதான நுழைவாயிலுக்கு அருகே கொழும்பு தேவி பாளிகா கல்லூரியின் மாணவியர் ஜயமங்கல கீதம் இசைப்பர். இதன் பின்னர் உடையணி அறைக்கு ஜனாதிபதி அழைத்துச் செல்லப்படுவார்.

பின்னர், பாரம்பரியத்துக்கு அமையப் பிரதி படைக்கல சேவிதர், செங்கோலை ஏந்த, படைக்கல சேவிதர், ஜனாதிபதி, சபாநாயகர், செயலாளர் குழு மற்றும் பிரதிப் படைக்கல சேவிதர் என்ற வரிசைப்படி அணிவகுத்து சபா மண்டபத்துக்குள் செல்வர். சபைக்குள் நுழையும்போது பிரதிப் படைக்கல சேவிதர் ‘கௌரவ ஜனாதிபதி’ எனத் தெரிவித்ததும் ஆளும் கட்சி எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தமது ஆசனங்களிலிருந்து எழுந்து நிற்பது பாரம்பரியமாக இடம்பெறும்.

சபா மண்டபத்துக்கு அழைத்துவரப்படும் ஜனாதிபதி சிம்மாசனத்தில் (அக்கிராசனம்) அமர்ந்து சபைக்குத் தலைமை தாங்குவார். இதன்போது சபாநாயகர், பாராளுமன்ற குழுநிலையின்போது அமரும் கீழ் பகுதி ஆசனத்தில் செயலாளர் குழுவுடன் அமர்ந்திருப்பார். இதனைத் தொடர்ந்து ஜனாதிபதியால் கொள்கை பிரகடன உரை நிகழ்த்தப்படும்.

இதையடுத்து, பாராளுமன்றம் நாளை வியாழக்கிழமை மு.ப 9.30 மணி வரை ஒத்திவைக்கப்படும். சபை ஒத்திவைக்கப்பட்டதும் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அழைக்கப்பட்ட விருந்தினர்களுக்கு தேநீர் விருந்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

9ஆவது பாராளுமன்றத்தின் ஐந்தாவது கூட்டத்தொடரை வைபவரீதியாக ஆரம்பித்துவைக்கும் நிகழ்வில் வெளிநாட்டு இராஜதந்திரிகள், முன்னாள் ஜனாதிபதி, பிரதம நீதியரசர், சட்டமா அதிபர், பாதுகாப்பு செயலாளர், முப்படைத் தளபதிகள் மற்றும் பதில் பொலிஸ்மா அதிபர் உள்ளிட்ட விசேட விருந்தினர்கள் கலந்துகொள்ளவிருக்கின்றார் படைக்கல சேவிதர் குஷான் ஜயரத்ன தெரிவித்தார். விருந்தினர்களுக்கான அழைப்பிதழ்கள் இலத்திரனியல் முறையில் அனுப்பி வைக்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, நான்காவது கூட்டத்தொடர் கடந்த 27ஆம் திகதி நள்ளிரவுடன் நிறைவுக்கு வந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

ஈழநாடு
Eelanadu



## இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலரை சந்தித்தார் அநுரகுமார

புதுடில்லி, பெப். 07

மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுர குமார திஸாநயக்க நேற்று முன் தினம் இரவு இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் வினய் மோகனை புதுடில்லியில் சந்தித்துள்ளார்.

இந்திய அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநயக்க தலைமையலான குழுவினர் புதுடில்லிக்கு விஜயம் மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## ஆஸி. செல்கிறார் ஜனாதிபதி

கொழும்பு, பெப். 07

இந்தியப் பெருங்கடல் மாநாட்டில் பங்கேற்பதற்காக இந்த வாரம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவுஸ்திரேலியா செல்லவுள்ளார்.

குறித்த மாநாடு அவுஸ்திரேலியாவின் தலைநகர் பேர்த்தில் இம்மாதம் 9 ஆம் மற்றும் 10 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளது.

குறித்த மாநாட்டில் ஜனாதிபதி முக்கிய உரையாற்றுவார் என ஜனாதிபதி அலுவலக சர்வதேச விவகாரங்களுக்கான பணிப்பாளர் டினூக் கொலம்பகே தெரிவித்துள்ளார்.

மேலும், ஜனாதிபதி தனது விஜயத்தின்போது அவுஸ்திரேலிய பிரதமரையும், அவுஸ்திரேலியாவின் வெளிவிவகார அமைச்சரையும் சந்திக்கவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

7 ஆவது இந்தியப் பெருங்கடல் மாநாட்டை இந்திய அரசின் வெளியுறவு அமைச்சு, அவுஸ்திரேலிய வெளியுறவு மற்றும் வர்த்தகத்துறை, சிங்கப்பூர் எஸ்.ராஜரத்தினம் ஸ்கூல் ஒப் இன்டர்நஷனல் ஸ்டடீஸ் மற்றும் பேர்த் யு.எஸ்.ஏசியா மையம் ஆகியவற்றுடன் இணைந்து இந்தியா பவுண்டேஷன் ஏற்பாடு செய்துள்ளது. (அ)

## டயானா கமகே தெரிவித்த கருத்தை நிராகரித்த பந்துல

கொழும்பு, பெப். 07



மருத்துவ குணம் கொண்ட கஞ்சாவை பயிரிட்டு ஏற்றுமதி செய்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக சுற்றுலாத்துறை இராஜாங்க அமைச்சர் டயானா கமகே தெரிவித்தமைக்கு தாம் பொறுப்பல்ல என அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அத்தோடு, இலங்கையில் மருத்துவ குணம் கொண்ட கஞ்சா பயிரிடுதல் மற்றும் ஏற்றுமதி செய்வது தொடர்பாக அமைச்சரவையில் முன்மொழிவு எதுவும் சமர்ப்பிக்கப்படவில்லை என்றும் அமைச்சர் பந்துல குணவர்தன குறிப்பிட்டார்.

இலங்கையில் மருத்துவ குணம் கொண்ட கஞ்சாவை பயிரிட்டு ஏற்றுமதி செய்வது தொடர்பாக அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக சுற்றுலாத்துறை இராஜாங்க அமைச்சர் டயானா கமகே நேற்று முன் தினம் தெரிவித்தார்.

இந்நிலையில், அமைச்சர் பந்துல குணவர்தன மேலும் தெரிவிக்கையில்,

இராஜாங்க அமைச்சர் டயானா கமகே அமைச்சரவை அமைச்சர் அல்ல எனவும் கஞ்சா பயிரிடுவது தொடர்பில் அவர் கூறியதற்கு தாம் பொறுப்பல்ல எனவும் குறிப்பிட்டார். (அ)

# சாந்தன் நாடு திரும்புவதற்கு எந்தவித தடையும் இல்லை!

## வெளியுறவு அமைச்சர் அலி சப்ரி அறிவிப்பு



கொழும்பு, பெப். 07

**இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலை வழக்கில் நீண்ட காலம் சிறைத்தண்டனை அனுபவித்துவந்த நிலையில் விடுவிக்கப்பட்டுள்ள சாந்தன் எனப்படும் தில்லையம்பலம் சுதேந்திரராசா மீண்டும் நாடு திரும்புவதற்கு எந்தவித தடையும் இல்லையென இலங்கை வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.**

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

இரு நாடுகளிலும் இருந்து சாந்தன் இலங்கை திரும்புவதற்கான கோரிக்கைகள் தொடர்ச்சியாக முன்வைக்கப்பட்டிருந்தன.

இந்தநிலையில், அவர் நாடு திரும்புவதில் எந்தவித தடையும் இல்லை என்பதுடன், இலங்கை அரசாங்கம் எவ்வித ஆட்சேபனையையும் தெரிவிக்கப் போவதில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

எனவே, எந்த சந்தர்ப்பத்திலும் சாந்தனுக்கு நாடு திரும்ப முடியும் என இலங்கை வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி குறிப்பிட்டார். (அ)

# வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்திலிருந்து தப்பித்த மாணவனை கைது செய்ய உத்தரவு!

யாழ்ப்பாணம், பெப். 07

வட்டுக்கோட்டை பொலிஸார் தாக்கியதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்த யாழ்.பல்கலைக்கழக மாணவனை உடனடியாக கைது செய்து நீதிமன்றில் முற்படுத்த கட்டளையிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், வட்டுக்கோட்டை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு இந்த கட்டளையை வழங்கியுள்ளார்.

போதைப்பொருளுக்கு அடிமையான அவரை நீதிமன்றின் ஊடாக மறுவாழ்வு முகாமுக்கு அனுப்புமாறும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அறிவுறுத்தியுள்ளார்.

மேலும் குறித்த நபர் பாடசாலை மாணவிகளுக்கு ஆபத்தை ஏற்படுத்தும் வகையில் மோட்டார் சைக்கிளை செலுத்திச் சென்றமை தொடர்பில் ஆசிரியர்கள், மாணவிகளின் வாக்குமூலத்தை பதிவு செய்து நீதிமன்றில் தாக்கல் செய்யுமாறும் அவர் பணித்துள்ளார்.

நேற்று முன்தினம் வட்டுக்கோட்டை பொலிஸார் தன்னை போக்குவரத்து விதி மீறியதாக வழிமறித்து வீதியில் வைத்து தாக்கியதுடன், பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றும் தாக்கினார்கள் என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணம் பிராந்திய அலுவலகத்தில் பல்கலைக்கழக மாணவன் முறைப்பாடு வழங்கியிருந்தார். (அ)

# ரணிலுடன் கைகோப்பதற்கு தயாராகும் சஜித் கட்சி எம்.பி.

கொழும்பு, பெப். 07

ஐக்கிய மக்கள் சக்தியின் காலி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக ஆளுங்கட்சிக்குத் தாவப்போவதாக அரசியல் வட்டாரத்தில் பேசப்பட்டு வருகின்றது.

கயந்த கருணாதிலக்க ஜனாதிபதியுடன் இணைந்து நடைபெற்ற ‘உறுமய’ காணி உறுதிப்பத்திரம் வழங்கும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டமையே இதற்கு காரணமாக அமைந்துள்ளது.

‘உருமய’ செயற்திட்டத்தின் தேசிய வைபவம் நேற்று முன் தினம் பிற்பகல் ரங்கிரி தம்புலு விளையாட்டரங்கில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இடம்பெற்றது.

குறித்த வேலைத்திட்டத்தின் முதற்கட்டத்தின் கீழ் பத்தாயிரம் காணி உறுதிகளை வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதமர் தினேஷ் குணவர்தன, காணி மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ உள்ளிட்ட அமைச்சர்கள் கலந்துகொண்டனர்.

இந்நிலையில் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலகவும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டிருந்தமை அரசியல் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

எதிர்வரும் நாட்களில் நடைபெறவுள்ள கட்சித் தாவலுக்கான முன்னோடி அறிகுறியாக இந்த வைபவத்தில் அவர் கலந்து கொண்டிருக்கலாம் என்றும் கூறப்படுகின்றது. (அ)

# இலங்கைக்கு படகு மூலம் கடத்தப்படவிருந்த 7 லட்சம் வலி நிவாரணி மாத்திரைகள் மீட்பு!

சென்னை, பெப். 07



இந்தியாவில் இருந்து இலங்கைக்கு கடத்த முயன்ற 7 இலட்சம் வலி நிவாரணி மாத்திரைகள் நேற்று முன் தினம் இரவு படகுடன் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதோடு, பெரிய பட்டினத்தைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இராமநாதபுரம் மாவட்டம் திருப்புல்லாணி அடுத்த புதுமடம் கடற்கரையில் இருந்து நாட்டுப்படகில் வலி நிவாரணி மாத்திரைகள் இலங்கைக்கு கடத்தப்படுவதாக கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த மரைன் பொலிஸார் பெரிய பட்டினம் கடற்கரையில் வைத்து ஒரு நாட்டுப்படகையும் அதிலிருந்து சுமார் 7 இலட்சம் வலி நிவாரணி மாத்திரைகளையும் பறிமுதல் செய்துள்ளனர்.

குறித்த விடயம் தொடர்பில் கைது செய்யப்பட்ட நபரிடம் பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 07.02.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.




# ஆப்கானிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் இலங்கை 10 விக்கெட்களால் வெற்றி!

கொழும்பு, பெப். 07

ஆப்கானிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி 10 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

ஆப்கானிஸ்தான் அணி இலங்கையில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடி வருகிறது. இரு அணிகளுக்கும் இடையிலான டெஸ்ட் போட்டி கடந்த 2 ஆம் திகதி தொடங்கியது. இந்தப் போட்டியில் ஆப்கானிஸ்தான் முதல் இன்னிங்ஸில் 198 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது.

அந்த அணியில் அதிகபட்சமாக ரஹ்மத் 91 ஓட்டங்கள் எடுத்தார். இலங்கை தரப்பில் விஸ்வ பெர்னாண்டோ 4 விக்கெட்களை கைப்பற்றி அசத்தினார். அசித பெர்னாண்டோ மற்றும் பிரபாத் ஜெயசூர்யா தலா 3 விக்கெட்களை கைப்பற்றினர்.

இலங்கை முதல் இன்னிங்ஸில் 439 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தது. அந்த அணியில் மத்தியூஸ் மற்றும் சந்திமால் சதமடித்து அசத்தினர். மத்தியூஸ் 141 ஓட்டங்களும், சந்திமால் 107 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழந்தனர். ஆப்கானிஸ்தான் தரப்பில் நவீத் ஸத்ரன் 4 விக்கெட்களை கைப்பற்றினார். நிஜத் மசூத் மற்றும் குவாய்ஸ் அகமது தலா 2 விக்கெட்க ளைக் கைப்பற்றினர்.

மூன்றாம் நாள் ஆட்டநேர முடிவில் ஆப்கானிஸ்தான் அணி இரண்டாவது இன்னிங்ஸில் ஒரு விக்கெட் இழப்புக்கு 199 ஓட்டங்கள் எடுத்தது. இப்ராஹிம் ஸத்ரான் டெஸ்ட் போட்டிகளில் அவரது முதல் சதத்தைப் பதிவு செய்தார். இப்ராஹிம் ஸத்ரான் 101 ஓட்டங்களுடனும், ரஹ்மத் ஷா 46 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர். ஆப்கானிஸ்தான் அணி இலங்கையை காட்டிலும் 42 ஓட்டங்கள் பின் தங்கியிருந்தது.

இந்த நிலையில் நான்காம் நாள் ஆட்டத்தில், இப்ராஹிம் ஸத்ரான் மற்றும் ரஹ்மத் ஷா ஆட்டத்தைத் தொடர்ந்தனர். ஸத்ரான் 114 ஓட்டங்களிலும், ரஹ்மத் ஷா 54 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர். அதன்பின் களமிறங்கிய வீரர்களில் நசீர் ஜமால் தவிர மற்றவர்கள் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்து வெளியேறினர். நசீர் ஜமால் 41ஓட்டங்கள் எடுத்து கடைசி வரை ஆட்டமிழக்காமல் இருந்தார். இறுதியில் ஆப்கானிஸ்தான் 296 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது.

பிரபாத் ஜெயசூரியா 5 விக்கெட்களை கைப்பற்றினார். இலங்கை அணிக்கு 56 ஓட்டங்களை களை இலக்காக நிர்ணயித்தது ஆப்கானிஸ்தான்.

56 ஓட்டங்கள் என்ற எளிய இலக்கை நோக்கி களமிறங்கிய இலங்கை அணி 7.2 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி இலக்கை எட்டி 10 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. திமுத் கருணாரத்ன 32 ஓட்டங்களுடனும், நிஷான் மதுஷ 22 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

பிரபாத் ஜெயசூர்யா ஆட்ட நாயகனாக தெரிவானார். (ஐ)

# தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் நியூசிலாந்து 528 ஓட்டங்கள் முன்னிலை!

மவுண்ட் மாங்கனு, பெப். 07

தென்னாபிரிக்க அணிக்கு எதிராக நியூசிலாந்த அணி 528 ஓட்டங்கள் முன்னிலை பெற்றுள்ளது.

நியூசிலாந்து - தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் ஞாயிற்றுக்கிழமை தொடங்கியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 141 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 511 ஓட்டங்களை குவித்தது.

இதில், ரச்சின் ரவீந்திரா 26 பௌண்ட்ரிகள், 3 சிக்ஸர்களுடன் 366 பந்துகளில் 240 ஓட்டங்களையும் கேன் வில்லியம்ஸன் 118 ஓட்டங்களையும் குவித்திருந்தனர்.

அத்துடன், கிளென் பிலிப்ஸ் 39 ஓட்டங்களும், டரில் மிற்செல் 34 ஓட்டங்களும், மேட் ஹென்றி 9 பந்தில் 27 ஓட்டங்களையும் பெற்றனர்.

தென்னாபிரிக்க பந்துவீச்சாளர் நீல் பிராண்ட் 6 விக்கெட் சாய்த்தார்.

பதிலுக்கு தனது முதல் இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா அணி



162 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது.

இதில், எட்வேர்ட் மூர் 23, ஹம்சா 22, டேவிட் பெடிங்ஹாம் 32, கீகன் பீற்றர்சன் 45 ஓட்டங்களைப் பெற்றனர்.

நியூசிலாந்தின் பந்துவீச்சில் மட் ஹென்றி, மிற்செல் சாண்ட்னர் தலா 3 விக்கெட்களையும் கைல் ஜமிஷன், ரச்சின் ரவீந்திரா தலா 2 விக்கெட்களையும் வீழ்த்தினர்.

இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி கேன் வில்லியம்சன் அசத்தல் சதம் அடித்தார். அவர் 12 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் 109 ஓட்டங்களைப் பெற்றார். 43 ஓவர்களில் நியூசிலாந்து அணி 4 விக்கெட்கள் இழப்புக்கு 179 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

இதன் மூலம் தென்னாபிரிக்க அணியை விட 528 ஓட்டங்கள் முன்னிலை பெற்றுள்ளது. நியூசிலாந்து அணி. (ஐ)

# மேற்கிந்தியாவுக்கு எதிரான ஒருநாள் தொடர் ஆஸி. வசம்!

சிட்னி, பெப். 07

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான ஒருநாள் தொடரை அவுஸ்திரேலிய அணி முழுமையாகக் கைப்பற்றியது.

மேற்கிந்தியத் தீவுகள் அணி அவுஸ்திரேலியாவில் சுற்றுப் பயணம் சென்றுள்ளது. இரு அணிகளுக்கும் இடையிலான ஒருநாள் தொடர் நேற்றுடன் நிறைவடைந்தது. 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் ஆஸ்திரேலிய அணி ஏற்கனவே இரண்டு போட்டிகளில் வெற்றி பெற்ற நிலையில், நேற்று மூன்றாவது போட்டி நடைபெற்றது.

இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அவுஸ்திரேலிய அணியின் பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் 86 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. அந்த அணியில் அதிகபட்சமாக தொடக்க ஆட்டக்காரரான அலிக் அதனாஸ் 32 ஓட்டங்கள் எடுத்தார்.

அவுஸ்திரேலியா தரப்பில் சேவியர் பார்ட்லெட் 4 விக்கெட்களை கைப்பற்றி



அசத்தினார். அடம் ஸாம்பா மற்றும் லான்ஸ் மோரிஸ் தலா 2 விக்கெட்களையும், சீன் அபொட் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

87 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற எளிய இலக்கை நோக்கி களமிறங்கிய அவுஸ்திரேலிய அணி 6.5 ஓவர்களில் அதிரடியாக இலக்கை எட்டி வெற்றி பெற்றது.

அவுஸ்திரேலிய அணியில் அதிகபட்சமாக ஜேக் ப்ரேசர் 41 ஓட்டங்கள் குவித்தார். அவரை தொடர்ந்து ஜோஷ் இங்லிஷ் அதிகபட்சமாக 35 ஓட்டங்கள் எடுத்தார். அதிரடியாக விளையாடிய அவுஸ்திரேலிய அணி 8 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் மேற்கிந்தியத் தீவுகளை வீழ்த்தியது.

இந்த வெற்றியின் மூலம் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரையும் முழுமையாக கைப்பற்றியது. (ஐ)

# இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட்; இந்தியா 106 ஓட்டங்களால் வெற்றி!



விசாகபட்டினம், பெப். 07

இங்கிலாந்துக்கு எதிரான 2ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியா அணி 106 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

விசாகப்பட்டினத்தில் வெள்ளிக்கிழமை தொடங்கிய இந்த ஆட்டத்தில் இந்தியா முதல் இன்னிங்ஸில் 396 ஓட்டங்கள் சேர்த்தது. அடுத்து ஆடிய இங்கிலாந்து 253 ஓட்டங்களுக்கு விக்கெட்களை இழந்தது. பின்னர் 143 ஓட்டங்கள் முன்னிலையுடன் 2-ஆவது இன்னிங்ஸை தொடங்கிய இந்தியா, 255 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தது.

இதையடுத்து, 399 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு தனது இன்னிங்ஸை தொடங்கிய இங்கிலாந்து ஞாயிற்றுக்கிழமை முடிவில் ஒரு விக்கெட் இழப்புக்கு 67 ஓட்டங்கள் சேர்த்திருந்தது. ஜாக் கிவ்ராலி 29, ரெஹான் அகமது 9 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருக்க, பென் டக்கெட் 6 பௌண்ட்ரிகளுடன் 28 ஓட்டங்கள் சேர்த்து ஆட்டமிழந்தார்.

நேற்று முன்தினம் தொடர்ந்து விளையாடிய இங்கிலாந்து அணியால் இந்திய அணியின் பந்துவீச்சை சமாளிக்க முடியவில்லை. அந்த அணி 292 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்களையும் இழந்தது.

இதனால் இந்திய அணி 106 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. இந்திய அணி தரப்பில் அதிகபட்சமாக பும்ரா, அஸ்வின் தலா 3, முகேஷ்குமார், குல்தீப் யாதவ், அக்ஸர் பட்டேல் தலா ஒரு விக்கெட் வீழ்த்தினர்.

இந்த வெற்றியின் மூலம் 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் இரு அணிகளும் தலா ஒரு வெற்றியுடன் சமநிலையில் உள்ளன.

# மாலைதீவுக்கு வரவிருக்கும் சீனக் கப்பல்: மோசமாகும் இந்தியாவுடனான உறவு!

**அன்பரசன் எத்திராஜன்**



சீனாவின் ஆய்வுக் கப்பலொன்று இந்த வாரம் மாலத்தீவுக்கு வரவிருக்கிறது. இது எதிர்பார்க்கப்பட்டது தான் என்றபோதும், அதன் வருகை, இந்தியா, சீனா, மாலத்தீவுக்கு இடையே ஏற்கனவே இருந்த பதற்றத்தை மேலும் அதிகரித்திருக்கிறது.


அதிகாரப்பூர்வமான தகவலின்படி, 'ஷியாங் யாங் ஹாங் 3' என்று பெயரிடப்பட்ட அக்கப்பல், தனது பயணத்தில் ஒரு இடைநிறுத்தமாகவும், பணியாளர்களின் சுழற்சிக்காகவும், எரிபொருள் நிரப்புவதற்காகவும் மட்டுமே மாலத்தீவு வரவுள்ளது. சுருக்கமாகச் சொல்வதெனில் இது முற்றிலும் ஆபத்தில்லாத ஒரு விஷயம்.

ஆனால், இந்தியா இதனை அப்படிப் பார்க்கவில்லை. இக்கப்பலின் வருகை இந்தியாவுக்கு குறைந்தபட்சம் ஒரு ராஜதந்திர ரீதியான அவமானம் ஆகும். இக்கப்பல் தரவுகளைச் சேகரிப்பதற்காக வரவுள்ளதாக என்று சிலர் அஞ்சுகின்றனர். இத்தரவுகளை பிற்காலத்தில் சீன ராணுவம் நீர்மூழ்கிக் கப்பல் நடவடிக்கைகளில் பயன்படுத்தலாம் என்றும் அஞ்சப் படுகிறது.

இருப்பினும், சீன வல்லுநர்கள், இந்தக் கவலைகள் ஆதாரமற்றவை என்று தெரிவிக்கின்றனர்.

சீன ராணுவத்தின் முன்னாள் மூத்த கர்னலான ஷௌ போ **(Zhau Bo)** பேசுகையில், சீனக் கப்பல்கள் இந்தியப் பெருங்கடலில் அறிவியல் ஆராய்ச்சி நடவடிக்கைகளை மேற்கொள்வது வழக்கமானது தான் என்றும், அந்நடவடிக்கைகள் முற்றிலும் சட்டப்பூர்வமானவை என்றும் தெரிவித்தார்.

"சில சமயம், கப்பல்களில் எரிபொருள், உணவு, நீர் ஆகியவை நிரப்பப்பட வேண்டியிருக்கும். இந்திய அரசு, இதனை ஒரு பிரச்னையாக மாற்றக்கூடாது. இந்தியப் பெருங்கடல் இந்தியாவுக்குச் சொந்தமானதல்ல," என்றார் ஷௌ போ. தற்போது அவர் பெய்ஜிங்கில் உள்ள சிங்குவா பல்கலைக்கழகத்தில் **(Tsinghua university)** பணியாற்றி வருகிறார்.



Source: Observed path via @detresfa shared on X social platform

### இந்தக் கப்பல் இலங்கைக்கு ஏன் செல்லவில்லை?

ஆனால், சீனா தனது கப்பல்களை இந்தியாவின் கடற்பரப்பிற்கு அருகில் அனுப்புவது இது முதன்முறையல்ல. கடந்த 2014-ஆம் ஆண்டு இலங்கையின் கொழும்பு நகரில் இரண்டு சீனக் கப்பல்கள் தங்கள் பயணத்தின் இடையே நின்றன. கடந்த இரண்டு ஆண்டுகளில் இரண்டு சீன ஆய்வுக் கப்பல்கள் இலங்கைக்கு வந்தன. இது இந்தியாவில் மிகுந்த அதிருப்தியை ஏற்படுத்தியது.

சீனா இலங்கைக்குப் பலகோடி அமெரிக்க டாலர்களை கடனாக வழங்கியிருந்த நிலையில் அக்கப்பல்கள் இலங்கைக்கு வந்தன.

உண்மையில், ஷியாங் யாங் ஹாங் 3 கப்பல், மாலத்தீவுக்கு வரும் முன் இலங்கையில் தங்கி பொருட்களை நிரப்பிவரத் திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால் அத்திட்டம் இப்போது நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாக இலங்கையின் வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் தாரக பாலசூரிய தெரிவித்தார்.

"எதிர்வரும் ஓராண்டில், நாங்கள் எங்கள் தொழில்நுட்பத்தையும் திறனையும் இந்த ஆராய்ச்சி நடவடிக்கைகளில் ஈடுபடும் அளவுக்கு வளர்த்துக் கொள்ள உள்ளோம்," என்று அவர் கூறினார்.

ஆனால், சீனக் கப்பல்கள் வருவதை இலங்கை நிறுத்தி வைத்திருப்பது, இந்தியாவின் கடுமையான ஆட்சேபனையின் விளைவாகப் பார்க்கப்படுகிறது.

ஆனால் இந்தியாவின் ஆட்சேபனைகள் மாலத்தீவில் எந்த விளைவையும் ஏற்படுத்தவில்லை. 1,200 தீவுகளால் ஆன இந்த நாடு பலகாலமாக இந்தியாவின் ஆதிக்கத்தில் இருந்தது. ஆனால் கடந்த நவம்பர் மாதம் அதிபர் தேர்தலில் வெற்றி பெற்ற சீன ஆதரவாளரான முகமது முய்சு அதை மாற்றப் பார்க்கிறார்.

'இந்தியாவே வெளியேறு' என்ற பரப்புரையை முய்சு துவங்கினார். மாலத்தீவில் இருந்த 80 இந்திய ராணுவ வீரர்களைத் திரும்பிப் பெறுமாறு அவர் கூறியிருந்தார். இந்தியா முன்பு மாலத்தீவுக்கு வழங்கியிருந்த மூன்று தேடுதல் மற்றும் மீட்பு விமானங்களைப் பராமரிக்கவே அவர்கள் அங்கு இருப்பதாக இந்தியத் தரப்பு தெரிவிக்கிறது.

மாலத்தீவின் நாடாளுமன்ற தேர்தலுக்கு இரண்டு நாட்களுக்கு முன்பு, அதாவது வரும் மார்ச் 15-ஆம் தேதிக்குள், வீரர்களை திரும்பப்பெறுமாறு முய்சு கூறியிருந்தார். கடந்த வாரம், தில்லியில் நடந்த பேச்சுவார்த்தைகளுக்குப் பிறகு, இந்தியா வீரர்களைத் திரும்பப் பெற சம்மதித்ததாகக் மாலத்தீவு வெளிவிவகார அமைச்சகம் தெரிவித்திருந்தது.

முதல் பகுதி வீரர்கள் மார்ச் மாதம் 10-ஆம் தேதியும், மீதமுள்ளவர்கள் மே மாதம் இரண்டாம் வாரமும் திரும்பி அழைத்துக்கொள்ளப் படுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

### வேகமாக வளரும் விரிசல்

இந்தியா-மாலத்தீவு உறவுகள் வெகுவாக மோசமடைந்திருக்கின்றன.

மாலத்தீவின் கடற்பரப்பை ஆய்வு செய்ய மாலத்தீவின் முந்தைய ஆட்சியில் கையெழுத்திடப்பட்டிருந்த ஒரு ஒப்பந்தத்தை புதுப்பிக்கப்போவதில்லை என கடந்த டிசம்பர் மாதம் முய்சு அறிவித்திருந்தார்.

அண்மையில் கொண்டாடப்பட்ட இந்தியக் குடியரசு தின விழாவில் மாலத்தீவு அரசின் மூத்த தலைவர்கள் யாரும் கலந்துகொள்ளவில்லை.

ஆனால் அதே சமயம், கடந்த மாதம் ஐந்து நாள் பயணமாகச் சீன சென்றிருந்த முய்சுவுக்கு அங்கு பலத்த வரவேற்பு அளிக்கப்பட்டது. அதற்குப்பின் சீன அரசின் பல உயர்மட்ட அதிகாரிகள் மாலத்தீவுகளுக்குச் சென்றிருக்கின்றனர். சீனா நிதியளிக்கும் பல கட்டுமானத் திட்டங்களையும் முய்சு அறிவித்திருக்கிறார்.

இவற்றின் மூலம் இந்தியா கவலையடைவது இயற்கையானது, ஏனெனில் மாலத்தீவின் அமைவிடம் மூலோபாய ரீதியில் இந்தியாவுக்கு மிகவும் முக்கியமானது. அதனை சீனா நெருங்குவதை இந்தியா விரும்பாது.

(16ம் பக்கம் பார்க்க)






# சாந்தனை நாட்டுக்குக் கொண்டு வரப்போவது யார்?

**நிலாந்தன்**





சாந்தன் இலங்கை வருவதற்குரிய நட வடிக்கைகளை எடுப்பதாக ஜனாதிபதி சிறிதரனுக்கும் மனோ கணேசனுக்கும் கூறியுள்ளார். சனிக்கிழமை நடந்த சந்திப்பில் மேற்கண்டவாறு ரணில் தெரிவித்துள்ளார்.

தேசிய நல்லிணக்க அரசியலின் மூலமே இது சாத்தியமாகியது என்று ஈ. பி.டி.பியின் பேச்சாளர் ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார். கடந்த செவ்வாய்க்கிழமை சாந்தனின் தாயார் அமைச்சர் டாக்டர் தேவானந்தாவை சந்தித்தார். சாந்தனை இலங்கைக்கு கொண்டுவர தான் நடவடிக்கை எடுப்பதாக தேவானந்தா சாந்தனின் தாயாருக்கு உறுதி கூறியுள்ளார்.

சாந்தனை இலங்கைக்கு கொண்டு வருவதற்கு உதவுமாறு அவருடைய குடும்பத்தவர்கள் முதலில் அணுகியது தமிழ்த் தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட கட்சிகளைத்தான். இந்திய உச்ச நீதி மன்றத்தால் சாந்தன் விடுதலை செய்யப்பட்ட பின் கிட்டத்தட்ட 15 மாதங்களுக்கு முன்பு இக்கோரிக்கையை முன்வைத்து சாந்தனின் குடும்பத்தவர்கள் தமிழ்த் தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட அரசியல்வாதிகளோடு பேசினார்கள். ஆனால் யாரும் பயன் பொருத்தமான நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை.

கடந்த சில வாரங்களாக சாந்தன் நோய்வாய்ப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார். அதனால் அவரை நாட்டுக்குக் கொண்டுவர வேண்டும் என்று அவருடைய குடும்பத்தவர்கள் மீண்டும் அரசியல்வாதிகளை அணுகத் தொடங்கினார்கள். சாந்தனை நாட்டுக்கு கொண்டு வருவதில் உள்ள பிரச்சனைகள் எவை?

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டிக்கப்பட்ட அனைவரும் முப்பது ஆண்டுகளின் பின் உச்ச நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டார்கள். அவ்வாறு விடுவிக்கப்பட்ட இந்தியத் தமிழர்கள் தமது வீடுகளுக்கு சென்று விட்டார்கள். ஆனால், விடுவிக்கப்பட்ட ஈழத் தமிழர்கள் தொடர்ந்தும் திருச்சி சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள். அதற்குக் கூறப்பட்ட காரணம் என்னவென்றால் அது போன்ற பாரதூரமான வழக்குகளில் சம்பந்தப்பட்டவர்கள் வெளிநாட்டவர்களாக இருக்கும் பட்சத்தில் அவர்களுக்கு விடுதலை அல்லது மன்னிப்பு வழங்கப்பட்ட பின் அவர்கள் இந்திய மண்ணில் தொடர்ந்தும் தரித்திருப்பதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்பதாகும்.

விடுவிக்கப்பட்ட ஈழத் தமிழர்கள் தமது நாட்டுக்குத் திரும்பி அனுப்பப்பட வேண்டும். எனினும் அதில் சாந்தனைத் தவிர ஏனைய மூவரும் நாட்டுக்கு திரும்பிவர விரும்பவில்லை. அவர்களுடைய உறவினர்கள் புலம்பெயர்ந்து வாழ்வதால் அந்தந்த புலம்பெயர்ந்த நாடுகளுக்குத் தாமும் செல்ல விரும்புவதாகத் தெரிவித்தார்கள். ஆனால் இந்தியச் சட்டங்களின் படி அவர்களை அவ்வாறு அவர்களுடைய சொந்த நாடு அல்லாத ஏனைய நாடுகளுக்கு செல்ல அனுமதிப்பதில் சட்டச் சிக்கல்கள் இருப்பதாகக் கூறப்படுகிறது. எனவே சாந்தனும் உட்பட அனைவரும் மீண்டும் திருச்சி சிறப்பு முகாமில் கடந்த 15 மாதங்களாகத் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

இப் புதிய சிறப்பு முகாமானது இதற்கு முன்பு அவர்கள் வைக்கப்பட்டிருந்த சிறப்பு முகாமுடன் ஒப்பிடுகையில் வசதிகள் குறைவானது. அங்கே ஒரு சிறிய அறைக்குள் இருவர் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள். 15-க்கும் குறையாத காவலர்கள் அவர்களைத் தொடர்ந்து கண்காணித்துக் கொண்டிருப்பார்கள். அந்த அறையோடு கழிப்பறையும் குளியலறையும் இணைக்கப்பட்டுள்ளன. எனவே அவர்கள் அறையை விட்டு வெளியே வருவதற்கான தேவைகள் குறைவு. அதற்கு முன் இருந்த சிறப்பு முகாமில் அவர்கள் காலை 6 மணிக்கு வெளியே வந்தால் மாலை 6:00 மணி வரையிலும் நடந்து திரியலாம்: உடற்பயிற்சி செய்யலாம் நூலகத்திற்கு செல்லலாம் பிரார்த்தனைகளில் ஈடுபடலாம். ஆனால் புதிய முகாமில் அந்தளவு வசதிகள் இருக்கவில்லை அது ஒரு புதிய வகைத் தண்டனையாக அவர்களுக்கு அமைந்தது. ஏற்கனவே நோய் வாய்ப்பட்டிருந்த சாந்தன் இப்பொழுது ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்படும் அளவுக்கு நோயாளி ஆகிவிட்டார். சிறை வைக்கப்பட்டதிலிருந்து இன்று வரையிலும் அவருடைய தாயார் அவரைப் பார்க்கவில்லை. முதிய தாயார் விமானத்தில் பயணிக்க முடியாத அளவுக்கு ஆஸ்துமா நோயாளியாக இருக்கிறார்.

சாந்தன் நாடு திரும்ப விரும்புகிறார். தனது குடும்பத்தவர்களோடு தனது மிஞ்சிய காலத்தை கழிப்பதற்கு விரும்புகிறார். சிறையில் அவர் ஏறக்குறைய ஓர் ஆன்மீகவாதி போலாகி விட்டார் என்று அவருடைய வழக்கறிஞர்கள் கூறுகிறார்கள். ஆன்மீக விடயங்களையே அவர் அதிகம் கதைப்பதாகவும் பற்றற்றவர் போல அவர் நடந்து கொள்வதாகவும் அவர்கள் கூறுகிறார்கள். நாட்டுக்குத் திரும்பி தன் தாய் சகோதரர்களோடு அவர் வாழ விரும்புவதாகவும் அவர்கள் கூறுகிறார்கள். ஆனால் அவர் நாடு திரும்பினால் இலங்கையில் அவர் பாதுகாப்பாக இருக்கலாமா என்ற சந்தேகம் தமிழகத்தில் உள்ள செயற்பாட்டாளர்களுக்கு உண்டு.

இந்திய உச்ச நீதிமன்றம் சாந்தனும் உட்பட வழக்கில் சம்பந்தப்பட்டவர்களை விடுதலை செய்தபின், அவர்கள் நாட்டுக்குத் திரும்பினால் என்ன நடக்கும் என்ற கேள்வி அவருக்காக வாதாடிய தமிழக வழக்கறிஞர்களிடம் இருந்தது. இக்கேள்வியை தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் எழுப்பி சம்பந்தப்பட்ட அமைச்சரிடம் இருந்து உத்தியோகபூர்வ பதில் ஒன்றை பெற்றுக் கொள்வது நல்லது என்றும் யோசிக்கப்பட்டது. தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அக் கேள்வியை சம்பந்தப்பட்ட அமைச்சரிடம் கேட்க வேண்டும் என்றும் எதிர்பார்க்கப்பட்டது.

ஏனெனில், இது விடயத்தில் முடிவெடுக்க வேண்டியது இலங்கை அரசாங்கம் தான். இலங்கைத் தீவின் வெளி விவகார அமைச்சும் பாதுகாப்பு அமைச்சுந்தான். எனவே, அது தொடர்பாக நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பியிருக்க வேண்டியதும் இலங்கை அரசாங்கத்தின் மீது நிர்பந்தங்களை பிரயோகித்திருக்க வேண்டியதும் நாட்டில் உள்ள தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள்தான்.

இந்த அடிப்படையில் சாந்தனின் குடும்பத்தவர்கள் நாட்டில் உள்ள மக்கள் பிரதிநிதிகளுடன் உரையாடியிருக்கிறார்கள். சில அரசியல் செயற்பாட்டாளர்கள் விக்னேஸ்வரனும் உட்பட தமிழ் மக்கள் பிரதிநிதிகளோடு இதுதொடர்பாக உரையாடியிருக்கிறார்கள். யாருமே அதுதொடர்பாக பொருத்தமான நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை. நாடாளுமன்றத்தில் உரையாற்றியது, அறிக்கை விட்டது, சாந்தனின் வீட்டுக்குச் சென்று அவருடைய தாயாரைச் சந்தித்து ஆறுதல் கூறியது, என்பவற்றிற்கும் அப்பால் எந்த ஒரு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினரிடம் அது தொடர்பாக நடைமுறைச் சாத்தியமான செயற்பாடுகள் இருக்கவில்லை.

சாந்தனின் வீட்டுக்குச் சென்று அவருடைய தாயாரோடு உரையாடிய நாடாளுமன்ற உறுப்பினர்களில் சுமந்திரன் ஒருவர். அதன்பின் அவர் அது தொடர்பாக ஜனாதிபதியோடு பேசியதாகவும், ஆனால் ஜனாதிபதி தென்னிலங்கையில் ஏற்படக்கூடிய விளைவுகளையிட்டுப் பயப்பட்டதாகவும் ஊடகவியலாளர் வித்தியாதரன் அவருடைய பத்திரிகையில் எழுதியுள்ளார்.

இப்பொழுது சாந்தன் நோயாளியாகி விட்டார். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார். அவருடைய குடும்பத்தவர்கள் விவகாரத்தை மீண்டும் -15 மாதங்களின் பின்- தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். பெரும்பாலான தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்திருக்கிறார்கள்.

தமிழரசுக் கட்சியின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் சிறிதரன் தமிழக முதல்வர் ஸ்டாலினுக்கு ஒரு கடிதம் எழுதியதாகத் தகவல். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி யாழ் இந்திய துணை தூதரகத்திற்கு ஒரு கடிதம் எழுதியதாகவும், கடிதத்துக்கு இந்திய துணைத் தூதரகம் பதிலளித்திருப்பதாகவும் ஒரு தகவல்.

சாந்தனை நாட்டுக்குள் அனுமதிக்கும் முடிவை எடுக்க வேண்டியது யார்? இந்திய மத்திய அரசா? அல்லது தமிழக முதல்வரா? அல்லது இலங்கை அரசாங்கமா?

இலங்கைத் தீவின் வெளிவிவகார அமைச்சும் பாதுகாப்பு அமைச்சும்தான் அது தொடர்பான முடிவுகளை எடுக்க வேண்டும். சாந்தனை நாட்டுக்குள் வர விடுவது என்ற முடிவை வெளிவிவகார அமைச்சு எடுக்குமாக இருந்தால் அதற்கு வேண்டிய தற்காலிக பயண ஆவணங்களைக் கொடுக்குமாறு சென்னையில் உள்ள இலங்கை உப தூதரகத்திற்கு உத்தரவுகளை வழங்கலாம்.

சாந்தன் அல்லாத ஏனைய மூவரின் விடயத்தில் இந்திய மத்திய அரசு முடிவெடுக்க வேண்டியுள்ளது. அவர்களை புலம்பெயர்ந்த நாடுகளுக்கு செல்ல அனுமதிப்பதா இல்லையா என்று. ஆனால் சாந்தனின் விடயத்தில் முடிவு இலங்கை அரசாங்கத்தின் கையில்தான் உண்டு. எனவே அதற்கு வேண்டிய முயற்சிகளை முன்னெடுக்க வேண்டியது நாட்டில் உள்ள தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் மனித உரிமை அமைப்புகளும் குடிமக்கள் சமூகங்களும்தான். யாருக்கு கடிதம் எழுத வேண்டுமோ, யாருடன் நேரடியாகப் பேச வேண்டுமோ அவர்களோடு உரையாடியிருந்திருக்க வேண்டும்.

முடிவில், சலித்துப் போன சாந்தனின் தாயார், கடந்த வாரம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை அணுகியதாகத் தெரிகிறது. தேவானந்தா நீதி அமைச்சரோடு அதுபற்றி உரையாடியதாகக் கூறப்படுகிறது. மற்றொரு நாடாளுமன்ற உறுப்பினராகிய அங்கஜன் ராமநாதனும் இந்த விடயத்தில் அக்கறை காட்டியிருக்கிறார். சில நாட்களுக்கு முன் சிறீதரன் வெளிவிவகார அமைச்சரோடு தொலை பேசியில் உரையாடியதாக ஒரு தகவல்.

அதாவது தமிழ்த் தேசிய நிலைப்பாட்டைக் கொண்டவர்கள் மட்டுமன்றி அதற்கு வெளியே நிற்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் சாந்தனின் விடயத்தில் அக்கறை காட்டியிருப்பதாகத் தெரிகிறது. கடந்த 15 மாதங்களாக சாந்தனின் குடும்பத்தவர்களுக்குத் திருப்தியான ஒரு பதிலைக் கொடுக்க தமிழ்த் தேசிய நிலைப்பாட்டை கொண்ட அரசியல்வாதிகளால் முடியவில்லை. அதாவது சாந்தனின் விடயத்தில் அவர்கள் மந்தமாகவே இயங்கியிருக்கிறார்கள். அது தமிழ்த் தேசிய அரசியலின் மந்தத் தனத்தையும் கையாலாகாத் தனத்தையும் காட்டுகின்றதா?

(ஆதவன் செய்தி)

# மாற்று வலுவுள்ள குழந்தைகளை உள்ளடக்கி கல்முனை வைத்தியசாலையில் விசேட நிகழ்வு



அம்பாறை, பெப். 07

மாற்று வலுவுள்ள குழந்தைகளுடன் கனடா சர்வம் அமைப்பு கல்முனை ஆதார வைத்தியசாலையில் விசேட நிகழ்வொன்றை நடத்தியது.

கனடா சர்வம் அமைப்பின் 2ஆம் வருட பூர்த்தியினை சிறப்பிக்கும் முகமாக வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி இரா.முரளீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வானது வைத்தியசாலையின் கேட்போர் கூடத்தில் கடந்த வெள்ளிக்கிழமை மிகச் சிறப்பாக இடம்பெற்றது.

இந்நிகழ்வில் மனநலம் பாதிக்கப்பட்ட மற்றும் விசேட தேவையுடைய பிள்ளைகளுக்காக சர்வம் அமைப்புடன் இணைந்து தங்களது இலவச பராமரிப்பு சேவையை அர்ப்பணித்த கல்முனை ஆதார வைத்தியசாலையின் சிறுபிள்ளை வைத்திய நிபுணர் எஸ்.என். ரொஷாந்த், உளநல பிரிவு மருத்துவர் யூ.எல்.சராப்தீன், இயன் மருத்துவப் பிரிவு உத்தியோகத்தர்களான ஜி.சந்திரகாஷன், ஏ.ஹொட்ஷன், பேச்சு மற்றும் மொழிச் சிகிச்சை உத்தியோகத்தர் செல்வி.வை.எம்.யூ. யாபா, தொழில்சார் சிகிச்சை உத்தியோகத்தர் செல்வி எம்.ரி.நஸ்ரின், குழந்தைநல விடுதி வைத்தியர்கள் விசேட பிரிவு ஆசிரியர்கள் உள்ளிட்ட பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

(அ)

# ரூ. 20 கோடி மதிப்பிலான கார்களை கைப்பற்றுமாறு நீதிமன்று உத்தரவு




கொழும்பு, பெப். 07

மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் கணனி அமைப்பில் உள்ள தரவுகளை அழித்து சொகுசு கார்களை சாதாரண கார்களாக பதிவு செய்து வரி செலுத்தாமல் இறக்குமதி செய்யப்பட்ட சுமார் 20 கோடி ரூபாய் பெறுமதியான இரண்டு சொகுசு கார்களை கைப்பற்றி அரசுடைமையாக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கொழும்பு பிரதான நீதிவான் பிரசன்ன அல்விஸ் நேற்று இந்த உத்தரவை இலஞ்ச ஊழல்கள் விசாரணை ஆணைக் குழுவுக்கு பிறப்பித்துள்ளார்.

குறித்த இரண்டு சொகுசு வாகனங்களும் 2005 ஆம் ஆண்டு இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டன. இவை, சாதாரண கார்களாக பதிவு செய்யப்பட்டமையால், சொகுசு வாகன இறக்குமதிக்காக அரசாங்கத்துக்குச் செலுத்த வேண்டிய வரி செலுத்தப்படவில்லை. இது தொடர்பில் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு நீதிமன்றத்துக்கு அறிவித்ததையடுத்து நீதிவான் இந்த உத்தரவை பிறப்பித்தார்.(ஐ)

# மாலத்தீவுக்கு வரவிருக்கும் சீனக் கப்பல்:...

(14ம் பக்கத் தொடர்ச்சி)

எம்முடன் பேசிய முன்னாள் இந்திய வெளியுறவுச் செயலாளர் சியாம் சரண், மாலத்தீவு இந்தியாவின் தெற்கு எல்லையில் இருப்பதால் அது மிகவும் முக்கியமானது என்றார். “இலங்கையில் நடந்ததைப்பற்றி இந்தியாவுக்குத் தீவிரமான கவலைகள் இருந்ததுபோலவே, மாலத்தீவில் நடக்கூடியதைப் பற்றியும் இந்தியாவுக்குக் கவலைகள் இருக்கும்,” என்றார் அவர்.

**மாலத்தீவு எதிர்கட்சிகள் கூறுவது என்ன?**

போக்கை மாற்றிக்கொள்ள அதிபர் முய்சுவை எதிர்க் கட்சிகள் கேட்டு வருகிறார்கள். இந்தியா போன்ற அளவில் பெரிய அண்டை நாட்டினைப் பகைத்துக்கொள்வது மாலத்தீவுக்கு எந்த வகையிலும் நன்மை தராது என்று அவர்கள் கூறுகின்றனர்.

கடந்த வாரம் , ஜனநாயகக் கட்சி முய்சுவுக்கு எதிரான பதவிநீக்க முன்னெடுப்புகளைக் கொண்டுவரத் திட்டமிடுவதாகக் கூறியிருந்தது.

உணவு, கட்டமைப்பு, தொழில்நுட்ப முன்னேற்றம் ஆகியவற்றுக்காக மாலத்தீவு இந்தியாவை நம்பியிருக்கிறது. மாலத்தீவிலிருந்து பல மக்கள் மருத்துவ சிகிச்சைக்காக இந்தியாவுக்கு வருகின்றனர்.

மாலத்தீவின் தலைநகரான மலேவில் வசிக்கும் வழக்கறிஞரும் எதிர்கட்சியைச் சேர்ந்தவருமான ஐக் அகமது ஈசா, “இந்தியாவுக்கு எதிரான மனநிலையில் மாலத்தீவு கொஞ்சம் எல்லை தாண்டிச் சென்றுவிட்டது என்று பலரும் நினைக்கிறார்கள்,” என்று கூறினார்.

இதுகுறித்து கருத்து கேட்டபோது மாலத்தீவு அதிபர் அலுவலகமோ, வெளியுறவுத்துறை அமைச்சகமோ பதிலளிக்கவில்லை.

சீனா இந்தியப் பெருங்கடலில் ஆராய்ச்சி மற்றும் வணிகம் சார்ந்து பல பெரிய திட்டங்களை வைத்திருக்கிறது. அதற்காக மேலும் பல கப்பல்களை சீனா இந்தியப் பெருங்கடலுக்கு அனுப்பலாம். இதனை எதிர்கிள்வது இந்தியாவுக்குப் பெரும் சவாலாக இருக்கும்.

சீனாவின் விமானக் கப்பல்களும் அவற்றுக்கான சேவைகளை வழங்கும் கப்பல்களும் இந்தியப் பெருங்கடலை வந்தடையும் என்று ஷௌ போ கூறினார். “இலங்கையில் செய்ததுபோல சரக்குகளை நிரப்பும் அவற்றின் செயல்பாடுகளை இந்தியா தடுத்தால், சீனா மிகுந்த ஆத்திரமடையும்,” என்று அவர் கூறினார்.

